உ

சிவமயம்.

சென்னைநகரையடுத்த அமுஞ்சிக்கரை

# வரசித்தி விநாயகர்

## பதிகம்.

---

தில்லைச்

# சிவகாமியம்மை

## பதிகம்.

---

இவை

தேவகோட்டையின்கண்

தி-வகை

வெ-ஆ-தி-மா,

சிதம்பரச் செட்டியாரால்

இயற்றப்பெற்று,

---

சென்னை, கந்தன் பிரஸிற் பதிப்பிக்கப்பெற்றன.

பிரஜோற்பத்தி௵ விருஷபரவி. 1931.

# அறிவிப்பு.

---

சென்னைமா நகரையடுத்த அமுருஞ்சிக்கரையிலிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ G. சாம்பசிவம் பிள்ளை யென்பவர்கள், சைவ வேளாள மரபிலே பரம்பரைக் கௌரவ குடும்பத்திலே பிறந்தவர்கள்; கல்வியறிவொழுக்கம் சிவபக்தி அடியார் பக்தி இரக்கம் இன்சொல் பரோபகாரம் விருந்தோம்பல் மருந்திபற்றல் முதலியவைகளிற் சிறந்தவர்கள்; அமுருஞ்சிக்கரையில் ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானுக்கு ஆலயத் திருப்பணி முற்றுவித்துத் தாபித்து நித்யாராதனை நடாத்திவருகின்ற புண்ணியசீலர்கள். இப்புத்தகத்திலுள்ள பதிகமிரண்டனுள், வரசித்திவிநாயகர் பதிகமானது, மேற்படியூருக்கு நாம் போயிருந்த காலத்தில் மேற்படி பிள்ளையவர்களது விருப்பத்தின்படிக் கியற்றப்பெற்றது.

இங்ஙனம்,

வெ. ஆ. தி. மா.

சிதம்பரச் செட்டியார்.

தேவகோட்டை.

# நூற்பயன்.

---

நேரிசை வெண்பா.

இப்பதிகந் தோத்திரஞ்செய் வார்க்கையு மிட்டசித்தி
யிற்பரந்தோர் ஞானபுஷ்டி சித்திக்கும்—எப்பொழுதும்
சோர்வி லரோகதிட காத்திரமுந் துன்னுநல்லோர்
சார்வும் பெருகுந் தழைந்து.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சென்னைமாநகரையடுத்த

அமுஞ்சிக்கரையி லெழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ வரசித்திவிநாயகர்

## பதிகம்.

---

### காப்பு.

நேரிசைவெண்பா.

மன்னமுஞ் சிக்கரையில் வாழும் வரசித்தி
முன்னவற்குச் செய்பதிக முற்றவே—அன்னோன்
சரணார விந்தந் தலைக்கொண் டேனன்பார்க்
கருணைகு மஃதென் றறிந்து.

## நூல்.

### கட்டளைக் கலித்துறை.

மண்ணுல கத்தவர் வாழ்த்தி வணங்கி வலம்வந்துதாம்
எண்ணிய வின்புற யானை முகங்கொண் டினிதிருந்தான்
தெண்ணில வூர்பொழிற் சென்னைக் கருகமுஞ் சிக்கரை
விண்ணவர் போற்றும் வரசித்தி நாம விநாயகனை. [யில் 1

விநாயகன் விக்கின ராசன் சுமுகன் விமலைமகன்
மனாதி களுக்கெட் டொணாத கணாதிபன் வக்ரதுண்டன்
இனைத தவிர்த்தமுஞ் சிக்கரை மேவுறகென் * ஏதென்
[பிறைப
பனுளுயிர் வர்க்கஞ் செனனந் தொறுஞ்செய்த பாக்கியமே 2

பாக்களைப் பாமரர் பாற்பாடிப் போய்வந்து பற்பலநாள்
போக்குகின் றாரறி யார்† ராசைக் காசைகொள் புன்புல
காக்கொ ளமுஞ்சிக் கரைவர சித்திக் கணபதியைப் [ேவர்
பூக்கொண்டு பூசிப் பவர்மனை வாழ்க்கையள் பூமகளே. 3

பூமக ளையக ‡ நேமி கடைந்த பொழுதுகொண்ட
ஆமை யுருவின் முதுகோ டகந்தை யறவெடுத்து

---

* ஏது—காரணம். † ஆசைக்கு ஆசை—பொன்னுக்கு விருப்பம்
‡ நேமி—சமுத்திரம்.

வாமி யுமைநகச் சாமி சிவனது மார்பணிந்தோன்
காமி கமுஞ்சிக் கரைவர சித்திக் கணபதியே. 4

பதிபசு பாச மநாதி யடிமை பசுவென்பதை
மிதிலைச் சனக னகம்பிர மங்கொண்ட வேந்தனுக்குக்
கதிபெறப் போதித்துக் காட்சியிற் காட்டுங் கருணைக்கடல்
திதிகொ ளமுஞ்சிக் கரைவர சித்திநற் றேசிகனே. 5

தேசம புகழமுஞ் சிக்கரை யென்னுந் திருப்பதியில்
வாசம் புரியும் வரசித்தி நாம மகோற்கடனை
நேசம் பெருக வணங்கித் துதித்து நினைப்பவர்க்குப்
பாசம் பரித்துள கூற்றஞ்சு மீற்றிற் பயமில்லையே. 6

* பயமில்லை நந்தனத திற்கென்று வந்தனம் $பத்துச்சத
நயனன் புரியக் குறுமுனி †குண்டிகை நாரங்கவிழ்த்
துயவரு காவிரி யாருக்கி முன்புய்த்த வுத்தமன்காண்
வயமி கமுஞ்சிக் கரைவாழ வந்த வரசித்தியே. 7

சித்தியும் புத்தியும் பூவின் மணமெனச் சேர்ந்தகலாச்
சத்திக ளாயிருந் தெத்தொழி லுஞ்செயத் ‡தாரகத்தின்

---

*பயம்—ஜலம். $ பத்துச்சதநயனன்—தேவேந்திரன்.
† குண்டிகைநாரம்—கமண்டலஜலம். ‡ தாரகத்தின் அத்தம்—பிரணவப்பொருள்.

அத்த நிராமய முத்த காரண வத்துவித்த
வத்து விருப்ப நமுஞ்சிர கரையெனு மாநகரே. 8

ஙகாரத் துயரமுள சிக்கரைச் சித்திரன் ஞமசஜ
மகாரத் தினத்தைப் புருகன பபன முககணனை
¶தகாரக் குகையுட பயாணிர மணபார தருதிபெனறு
பகாரத் தருவன பஞ்சு திருவபபங்கயமே 9

பங்கய வாவிப் பரவு முப்ப சிரசைப் பாறபு துந்து
கங்கை யறுகர வபமொணணைப் வணணி சலதிர பபாதி
திங்க ளணிவர சித்தி கரைநாரணர தேசவைசெய்து
மங்கள வாழ்வினைப் பெற்றோங்கிய திந்த யணுலகே 10

---

ஸ்ரீ வரசித்திவிநாயகா பதிகம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ குருசித்பாதந் துணை.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைப்பதியி லெழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ சிவகாமியம்மை

## பதிகம்.

---

### காப்பு.

நேரிசை வெண்பா

சிதம்பரத்தில் வாழுஞ் சிவகாமி யம்மை
பதம்பணிந்து நற்பதிகம் பாட—மதம்பொழியுங்
கற்பகவி நாயகனைக் கைதொழுதேன் முன்னிற்பான்
சொற்பொருளை மேன்மேற் சொரிந்து.

## நூல்.

### ஆசிரிய விருத்தம்.

உலகெலா நிறைசரா சரப்பகுதி யாவையும்
உதரநோ வாட லீன்றவ்
வுயிர்க்குறுதி யும்முடற் குறுதியுந தந்தியக்
குள்ளியந் திரமா கியே
பலகருவி யாற்றலும் பாலிக்கு மாதா
பராசக்தி யென்று நின்னைப்
பன்மறையு முறையிடுஞ் சுருதிபர மாணப்
பரிசதொரு வாறு நிற்க
அலகிலுயி ருள்ளுணர்வு நடைசெயலை வல்லபத்
தாற்றுவோர் சத்த ரென்றும்
அல்லவ ரசத்தரென் றுஞ்சொலப் படுதலால்
அனைத்து முன்செயல காட்சியாம்
விலகலா வன்னைநீ பின்னையென் ஞ்தெனுயிர்
மெய்க்குறுதி யீதி கண்டாய்
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
மேவுசிவ காமி யுமையே.

சச்சிதா நந்தமய சார்த்தூல சர்மதர
சசாங்க மவுலி க்ஷீர
ஜலதிருக விஷபாந சாசுவத மாதேவ
ஸர்வலோ கைக நாதன்
இச்சையான் முப்பத் திரண்டறம் வளர்த்தியென்
றிருநாழி நெற்கொ டுப்ப
ஏற்றதனை யிமயகிரி மாமேரு பல்கோடி
யிணையமேன் மெல்வி ளாத்துக்
கச்சிமா நகரிடைப் பச்சைமா மயிலெனக்
காமகோட் டத்தி ருந்து
காருணிய மீதூர வாருயிர் பொலிந்திடக்
கலைபுகல்வி திப்படிக்கு
மெச்சறம் வளர்த்தலா னின்கருணை யோடுமை
விசேஷமும் விளக்க மாகும்
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
மேவுசிவ காமி யுமையே. 2

---

*சார்த்தூலசர்மம—புலித்தோல், சசாங்கன்—சந்திரன்,
க்ஷீரஜல திருகவிஷம்—பாற்கடலிற்றோன்றிய ஹாலாஹல விஷம்.

*காட்டினிற் றிருமான் மகப்பேறு கருதிச்
கடிந்தவஞ் செய்த காலை
கண்ணுதலுன் னொடுமிட பாரூட மூர்த்தியாய்க்
காட்சிதந் தென்னை கண்ணை
வேட்டதென நினைவிலக் கிச்சிவனை மட்டிமே
வேண்டிய கந்தப்பரைக் கந்
விண்டதனை யீன்றெரி விழிக்கிளைய யொப்பித்தனன்
வீடலாய பிருங்கி முனிவனை
பாட்டளி யுருக்கொண்டு லிங்கத்தி னூடேபோய்ப்ப
†பதக்கணஞ் செய்து பரம
பதியைமட் டிருதொழுது பிறகவு மசக்தனைய்ப
பதமூன்று பெற்று நின்றன்
வீட்டினொடு போகமிரு பேற்றிறகும நின்கருணை
வேண்டியது முக்கி யங்காண்
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரதனின்
மேவுசிவ காமி யுமையே. 3

---

*இப்பாட்டிற்கண்ட சரித்திரங்களை, கந்தபுராணம் திருவாரூர்ப்புரா ணம் கரைபேறவிட்ட நகர்ப்புராணங்களுள் விரிவாயறியலாம்.

† பதக்கணம்—ப்ரதக்ஷிணமென்னும் வடமொழி இவ்வாறு வந்தது.

காழிநகா தன்னிலவெண முததலை கொழிததிடக்
கமலமலர் பிரம தீ தத்த
கரையிடைந திருஞான சமபந்த மூர்த்திய ப
கவுணியா குலதிலகா பூந்து
வாழுமவை திகசைவ புலிகெலா மீடேற
வாய்மலர்ந தமிழு மீமம
வளாத்து நீகமந் நதவாாய பாஞாந
மயமான பாலுண டமைத
ஊழிதொறு நின்றிட சதுா வேத சாரமா
புயர்சிவ பாதது வததா
கோடாங்கு கைதா வாரமென வுபகரித தததனுலும
உன்மகத துவமவி ளங்குய
வேழமுக னொடாறு முகனுனது மடியுற்றி
விளையாட முறுவல் பூப்பாய்
மேதினி தழைநதிடத் தில்லைமா நகரத்தில்
மேவுசிவ காமி யுமைமயே. 4

MINATHA IYER LIBRARY MADRAS

காரிருட் படலந் திரண்டனைய *மேதிக்
கடாவுகைத் தேறு காலன்
காலாந் தரத்தெனது நகர்கொணர்தி ரென்னவக்
காலபடர் குறுகி வந்து
பாரிற் பிறந்துள்ள வாருயி ரனைத்தையும்
பற்றி†வை வச்சு தப்பேர
பட்டினத் துய்ப்பநம னவ்வுயிர்கள் செய்பவப்
பகுதியை நோக்கி யார
வாரித் தழும்படிக் கேற்றதுன் பீவனென
*வருத்தநால் யாவு மந்தோ
மதியிலாப் பேதையேன் றேகநீங் கும்போது
மறலிபய நீக்கி யருளி
மேருவில் வீரனொடு விடையேறி வந்தென்
விழிக்கிலக் காதல் வேண்டும்
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
மேவுசிவ காமி யுமையே. 5

---

*மேதி—எருமை. †வைவச்சுதப்பட்டினம்—யமபுரம்.
*வருத்த—வருத்தனென்னும் வினைமுற்று.

இரவிமதி †பூமிசேய் $புந்திகுரு வெள்ளிசநி
ராகுகே துக்க ளெல்லாம்
இயங்குவதுன் வலுவினா லாதலா லன்பரை
யென்றும்வா திக்க மாட்டா
‡சரவியல்கொ ளணையர்திசை புத்திசித் திரநன்மை
தருவவாய்ப் பரிணமிக்கும்
தாபசுர பித்தவா தஞ்சிரக் கம்பகப
சந்நிமுத லேயெ லாம்போம்
*புரவுனது பேர்சொலிப் பூதியொடு குங்குமப்
பொட்டணிதல் கண்டா லுமே
பூதபசி ரேதபை சாசரா க்ஷஸவிஷம்
பொல்லா விலங்கு மோடும்
விரவுன்மே னிப்பசுமை பாயவர னதுசெய்ய
மேனியிற் பாதி கொண்டாய்
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
மேவுசிவ காமி யுமையே. 6

†பூமிசேய்—செவ்வாய் $புந்தி—புதன்
‡சரவியல்—சஞ்சரிக்கு மியல்பு. *புரவு—ரக்ஷை

†மடியாமை நல்கமு தெடுத்துண் ணு மாறசுரர்
வானவரும் வேரி கடைய
வருநஞ்சு கண்டோட வும்மைய மீந்ததனை
மாதேவன் வாய்மடுக்கக்
¶கடியாம லுண்ணினுமவன் ‡முடியானெ னும்முறுதி
கண்டும்நீ பதறி யன்னோன்
கழுத்தைப் பிடித்தந்த மட்டாய் நிறுத்தினது
கணவனுக் கிடர்வந் ததேதல்
$ துடியாத பெண்டிரவன் மடிநெருப் பாமெனச்
சொற்றநூல் விதியை யுலகத்
தோகையர் கடைப்பிடித் தொழுகட்டு மென்பதைச்
சூழ்ந்து செய்செய லாகுமால்
மிடியா வையுந்தொலைத் தன்பர்சௌ பாக்கியம்
மேவக்க டைக்க ணிப்பாய்
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
மேவுசிவ காமி யுமையே. 7

---

†மடியாமை—இறவாமை. ¶கடியாமல்...நீக்காமல்
‡முடியான் என்னும் உறுதி—இறக்கமாட்டானென்ற நிச்சயம்.
$"துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு," என்பது, ஔவைதிருவாக்கு.

பொன்னிமய மலையரசு மேனையா மனைவியொடும்
 புரிதவத் திறநி ரங்கிப
புத்திரி யெனப்போந்து சத்திநீ சத்தனைப்
 புராரியைப் பிரிந்தபோது
†பின்னைதிரு மாலொடும் பிரமனொடு வாணியும்
 பிரியா திருந்தனன்றோ
பிரபஞ்ச பூரண ரலாமையா லவர்களது
 பிரிவின்மை வறிது போக
உன்னலற் றுண்பெண் *ணிணைவிழைச் சற்றுற்
 பவதொழி லுறுமை யாலே
உனைப்பிரி யுமே யுலககா ரணரென்கை
 உண்மையா முண்மை யாமால்
மின்னினிடைபொன்னினுடைஅன்னநடைகன்னன்மொழி
 வேய்ந்தபூங் கொம்ப ரனையாய்
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
 மேவுசிவ காமி யுமையே.

---

† பின்னை—இலக்குமி * இணைவிழைச்சு—வதுவைசங்கமமென்கின்ற சையோகம்

போதவனு மாதவனு முயர்பரந் தாமெனப்
போர்புரிய வீச னெதிரே
பொருப்பா யெழுந்தண்ட மூடுருவி நீங்கமால்
பூமிபுக் கேன மாகிப்
பாதமறி யாதயா விதியனன மாகிவிண்
பறந்துவீழ் பூவை நோக்கிப்
பரன்முடியை நான்கண்ட தாகநீ யொருபொய்
பகரென வதற்கி சைந்தஞ்
சாதுசொல் *கேதகையை யெம்பிரான் கொள்ளாது
தள்ளிடினு நீதரித் தாய்
தந்தையினு மக்கண்மேற் குற்றம பொறுத்தருள்கை
தாயர்கு ணமாதல் கண்டாம்
வேதவித் தானபிர ணவ †பஞ் சரத்துள்
விரும்பியுறை பசிய கிளியே.
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
மேவுசிவ காமி யுமையே. 9

---

*கேதகை—தாழம்பூ. †பஞ்சரம்—கூடு,

நால்வகைத் தோற்றத் தெழுபிறப் பெய்பத்து
நான்கிலக் கத்து யோநி
நாநா விதத்தநுற் பவபேதம் யாவினும்
நான்பிறந் தெய்த்தொழிந் தேன்
பாலனு கியவென்னை யநாதியே பந்தித்த
பந்தத்தை வெட்டி விட்டுப்
*பசுபாச நில்லா தடங்கியொழி யாநந்த
பவநத்தை நன்க ருளுவாய்
சீலமுறு முத்தியுங் கருணைமய மானசத்
திநிபாத முற்ற வர்க்கே
சித்திக்கு மென்னவுயர் சுத்தாத்து விதசைவ
சித்தாந்த நானு வலலால்

---

*பசு பாசம்—பசுத்துவமும் பாசத்துவமும், இவை முத்தி நிலையில் நில்லாவென்பதை, "பதி பசு பாச மெனப்பகர் மூன்றிற்—பதியினைப் போற்பசு பாசம் அநாதி—பதியினைச் சென்றணு காபசு பாசம்—பதியணு கிற்பசு பாசம் நிலாவே" எனவருந் திருமந்திரத்தா லறிக.

மேலதன் றுணையாய் நிமித்தமாய் முதலாய்
விளங்குபொரு ளாதி நீயே
மேதினி தழைந்திடத் தில்லைமா நகரத்தின்
மேவுசிவ காமி யுமையே.

---

ஸ்ரீ சிவகாமியம்மை பதிகம்
முற்றுப்பெற்றது.

ஸ்ரீ குஞ்சிதபாதந்துணை.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

பாண்டியதேசத்திலுள்ள

கண்டனூர்

# மீனாக்ஷியம்மை

# பிள்ளைத்தமிழ்.

## சுந்தரேசர் பதிகம்.

இவை

காரைக்குடியில் வசிக்கின்ற

மழவராயனேந்தல்

சிதம்பரதீக்ஷிதரவர்கள் குமாரர்.

சதாவதானம்

மகா-௱-௱-ஸ்ரீ

பாலசுப்பிரமணிய ஐயரவர்கள்.

இயற்றியவை.

---

கண்டனூர், மு. நா. நா.

மகா-௱-௱-ஸ்ரீ

நாச்சியப்பசெட்டியாரவர்களால்

தஞ்சை "நாஷனல் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டன.

1894.

சிவமயம்.

# சாத்துகவிகள்.

---

தேவகோட்டை,

வீ ர. லெ. மகா-௱-௱-ஸ்ரீ

வித்துவச்சிகாமணியாகிய

## சிந்நயச்செட்டியாரவர்களியற்றியது.

நற்றமிழ்க்கடலுட்புக்கு நயத்தசொற்புனன்மடுத்துக்
கற்றவரவைக்குன்றேறிக் கண்டனூர்க்கயற்கட்டாயாம்
பொற்றபைங்கொடியுவப்பப் பொருட்கவிமழைபெய்தன்றூற்
றுற்றமேற்குலத்துப்பால சுப்பிரமணியமாலே.

---

அமராபதி புதூர். வயி. நாக. ராம.

மகா-௱-௱-ஸ்ரீ

## அ-இராமநாதச்செட்டியாரவர்களியற்றியது.

கொள்ளைத்தமிழ்கூட்டுணைப்புலவோர் கூடன்மிகுங்கூடலைப்போலக்
குறைவில்வளஞ்சார்நகர்தேடிக்கொண்கன்றனையரொடும்பொழிவி
கள்ளைத்தமிழேழிசைச்சுரும்பர் களித்துண்டாடுங்கண்டனூர்க் [ற்
கவின்பொற்கோயில்கொண்டுறையங்கயற்கட்பிராட்டிக்கு[illegible]ஞ்சிறப்
வளைத்தமிழ்தீராதவொலி மழலையிருக்கைப்பாலசுப்ர [ப
மண்யவிப்ரசிகாமணிசொன் மருவும்பொருண்மதுரம் பெருகப்
[illegible]ள்ளைததமிழ்தந்தனனெல்லாம் பெறுஞ்சுலொருதாய்மிகமகிழ்ற்
[illegible]ரிதுங்கருப்பந்தழைத்தின்பம் பெறுதல்வியப்போ பேசுதிரோ.

வாச்சியப்பன்வெகுவிதத்து வனியும்வேத
வாச்சியத்தின் னிசையொலியுமலியுந்தேவர்
வாழுமாலயஞ்செறியாலயநன்னாட்டு
மன்கண்டனூர்க்கரசி வளரும்பிள்ளைப்

பேச்சியப்பனிடங்கொளுமங் கயற்கட்டாய்பூம்
பிரசம்வழி கழன்மலர்க்குப்பிறங்கமேலாம்
பிள்ளைத்தமிழையணிந்தான் மறையோன்வாய்மை
பேசுபாலசுப்ரமண்ய ப்ரபலனுனின்
னுச்சியப்பனமகமிகுமேழ் கோயிலவைசி
யர்க்குட்கற் பகவேழுநீழலாளு
மன்புதழைகுடியான முதன்மைநாச்சி
யப்பனுவப்புறப்பெற்ற சுகுணசீல
நாச்சியப்பன்மன்புதல்வர்ப் பேறுமவேறு
நவில்செல்வ மனைதழையுமென்னாளுமெய்தி
நாடுபுகழ்செழித்து நீடுழிவாழ்வா
னுனிலமெல்லாம்வாழ்த்து நண்ணமன்றே.

---

அரியக்குடி, சா. ராம. லெ. ராம.
மகா-ள-ள-ஸ்ரீ
அரங்கநாதச்செட்டியாரவர்களியற்றியது.

விண்ணேறுநெடும்பொழில்சூழ் விரிபுகழ்நற்கண்டனகர்ப்
பண்ணேறுமொழிக்கயற்கட் பரம்பரைக்குக்காரைநகர்த்
தண்ணேறுபாலசுப்ர மண்யனெனுந்தனிமறையோன்
மண்ணோர்களுயப்பிள்ளைத் தமிழ்தந்தான் மதிதுவந்தே.

---

வைடயூர், சா. கி. மகா-ள-ள-ஸ்ரீ
அரங்கநாதச்செட்டியாரவர்களியற்றியது.

பிள்ளைக்கவியைப் பெரியகவியாத்தந்தான்
வெள்ளைக்கவியுலகில் வேறெல்லாந்—துள்ளுகயல்
போலுநயனத்தி பொழிற்கண்டனூருமைக்கு
பாலசுப்ர மண்யவிப்ர மன்.

---

காரைக்குடி வித்யாசாலை

மகா-ள-ள-ஸ்ரீ

# [illegible] இயற்றியது.

[illegible] கமபாக காயாநி [illegible]
தரை உளபடிக்கப புண்டக சணமுஞ்
செந்த நா தி [illegible] னகபாயவு
க் கடை [illegible] ஆக காநகடைகுறுகு
பட கடைபுலர்ந்து பாடுனாகருதவு
பி னடலெபுநித்த வெண்டலையுலகத்து
நிற உணசிப்பன பற்பலவுயிர்களை
வயாதெவிவினறித் தயாவினனகளித்தே
[illegible]சாகஹினிலிருமை யாகக்குமருள செய்
யாவரு மபோற்றுமக் காரணங்குறித்தே
மீனவேராசஷியென மாதிரவழுத்து
முப்பொருளுரைக்கு முதுமறைப்பொருளே
மெய்ப்பொருளாகும் வீடெனத்தெளிந்த
பொய்ப்பொருட்பூவாப் புத்தியரிமயரிற்
கப்பாடவிர்ப கவினுறப்பொலிதவி
ண்டனாருபருங்கண்டனாராமாந்த
மெண்ணுஞ்சறமு மண்ணிடைவளாதத
விசித்ருசீரத்திர பெரியணமற்றம
வழியெயான றுருட்டும புழியணவாழ்வுற
வுண்ணிறையருளிற வெணமகவாய்வரு
பெற்றிக்கிணவக மற்றவடனக்குச்
சொனனலங்கெழுமிப் பொருணலம்பொதிந்தங்
கிளவிசைபழுத்தே யியனவரசம்பெற்
றையிருகுற்றமற் றவவழகடுத்த
தெள்ளமுதனைய செறிபெருங்கவிக்குப்
பிள்ளைக்கவியெனப் பெயர்தந்துரைத்தன
னுள்ளற்கமலத் தகழ்புடையுடுத்த

விருவாரோடுய கொருகிரிமேயப்பச்
செய்பணிகுயிற்றிய செரிசேணிகர்த்த
ராமானகருங் காளைமாதக த
கறுசேநப்பிற் பகுமாருடைதான்
ம்பரப்பேப ரா ஸ்ரீமயபெயருமான
றட்டாவியன்ன குட்டாபதி
முட்டாதியற்று பட்டாவதானி
லேவாசாலக ச
பாலசுப்பிரமணியவெண்பாதேரா.

---

செது யூர் ஆறுபந்தவே படம்
மகா-௱-௱-ஸ்ரீ
சொக்கலிங்க அய்யாவவர்களியற்றியது.

சீர்மேவுகிரியைமுதலாகுமைன்சத்திசா
திதையாய் மறைகளெல்லாந்
தேர்ந்துதேர்ந்தன்மையே தொற்றினதமிலபல
செழியர்கோன் பணிமுன்னு
ஞார்மேவுமுள்ளாமொடியற்றுநோனபானையகவி
னண்ணிவளர் பருவநோக்கி
நல்லார்முனின்றுபுகல் சொல்லாம்ப்ரபந்தமெனு
நற்செவிலியர்க்கவிகளா
மோர்மேவுசங்குகொண்டன்புகண்டாகவுப்த
திலகுபொருளாயவமுதை
யெண்டழுவுகண்டனக ரங்கயற்கண்ணிசெவி
யின்மடுத்தூட்டிவித்தான்
பேர்மேவுகாமைமாநகருளாஞென்றவிப்
பிரகுலோற்பவ சுகுணனோர்
பெறுசிதம்பரநாம னருண்மைந்தன்வாலசுப்
பிரமணியநாவலோனே

---

—பூர் மகா-ள-ள-ஸ்ரீ

நெ. ராம. நெக்கலையப்பசெட்டியாரவர்கள்

இயற்றியது.

...மாடம் ... தக ... கசக நகரதனைக டங்குமணிமாடகூடந் [ந்
... ழுக ... தருவ ... புரி ... லாரகீசாவியு ... சாரதிலகுகண்டனூரி
... ழுவைகையமுதந் தேவியிலராமீசபவானிசசாதமுறவருகமைத்துக
...ளிடமசுபரி ... மங்கைபாகனையகச் சங்கரியெனம்மையார்கருந்
...ருமங்கைகூடாத கலைமகளையடபுதசசேப்ககவிச்சீரதிபாடித்
...நலிநாயக ... மெய்த்துவோமெனமுளரிசோகதியறவமபுரிதரத்
...ரவிதனகளாவனைப் பரவுப்புகழ்முற் றிசைபரவுகயிலைவிடபத்
திபயவுருவெனையுறல கணேளமயங்கியே நேகநீங்காதுசேர்க்கப்
பெருமைபுரிசேடனுமடிககடியினிப்பப் பிளப்புகாநீட்டிநீட்டிப் [ப்
பருகுநேர்புண்மெதன பிரமசைத்தங்கனம் பேணிப்படிந்துவாழ்ந்தி
ரேவதாகிபிகள ஷிப் பேறறைப்புகன்றிடப் பெறுதிறமிங்குநிற்றல்
பிசகாபெடனந்தெளிந் ததிகவிரைவாகப் பிரதினுட்கூர்ந்துசெல்வ
ஒரியகற்பணையநாயுர்யரசவாரியை யலைப்பநற்கண்டின்மேலா [வை
பமைந்தனைபிள்ளைத் தமிழ்க்கவிகனூறுமே யாரெனிற்கிளருமழ
பம்பதியினவாசச்சி தம்பரப்பணவரி னருந்தவத்தாலுதித்த
வாதிசிவபக்தனும் வாலசுப்பிரமணிய வாண்டகைக்கவிஞரேதே,

---

கண்டனூர் மகா-ள-ள-ஸ்ரீ

வீரப்பய்யாவவர்களியற்றியது.

சுப்பிரமணியவிப்பிரன்செய்த தூப்பெருஞ்சேய்க்கவிகேட்டே [ந்த
தைபிறப்பெனக்குவாய்த்ததென் மகிழ்வாவிருங்கடல்கருங்கடல்விழு
நகப்பொருளானுள்கமலமான் கலைமான் கமலனுமருவுபுவெளுத்தா
ரிப்புவிக்கண்ணுனிரேனெனப்பிலம்புக் கேந்திறனீசபூடணனே.

---

# சாத்துகவிகள்.

காரைக்குடி மகா-ா-ா-ஸ்ரீ

## மழுவைச் சிதம்பர பாரதியவர்களியற்றியது.

திருக்கொழிக்குந்தண்டலைசூழ்கண்டனூர்ச்சபராஜேந்த்ரதேவிமொச
தருக்கிளர்செங்கரன்பாலசுப்ரமணியனபிள்ளைத்தமிழ்ப்பாவினை—
கருக்குலவுமுதற்பருவங்காப்புவளர்மதிமுதத்தை காணவீறறிவ
மருக்கமழ்பூந்தொகையொடாடுதலாய்க்கண்ணறங்கணங்கவளரத்தான
[மாமேதா

---

அரியக்குடி மகா-ா-ா-ஸ்ரீ

## ஸ்ரீமத். கிருஷ்ணமாசாரியாரவர்களியற்றியது

பகன்மணிந்தரமிலகவங்கம்பயினறும்பர்பரவலானைதத ஸ்ரீஇயொண
பணியமலைநல்கா விளங்கற்பகங்கொண்டு பகர்சலாநிதியுமாகித்
தகையிஞக்கந்தந்துதிருவிஞயகனுமுயர் சந்தானனகுமரனுந்
தாஙகியுயர்கண்டனகரங்கபற்கண்ணிநற் சங்கரிப் பாலுநதிவாய் [யா
மிகுமகிமையின்னமுதைவிண்பராயிசைதந்து பிணணியமருங்கருமை
மேவுகாரைப்பதிமனவாலசுப்பிரமணிய விபுதவாரிதமுகந்து
சகதலத்திசையுணர்விஞன்மப்பசுங்கூழ்க டழையச்சிறந்தபிள்ளைத்
தமிழென்றருந்தமிழ்த்தமழைபெய்வித்ததுஉணிகர்தகைநாசசியப்பர
(விமேய

---

கோட்டையூர் மகா-ா-ா-ஸ்ரீ

## சங்கீதவித்வான் அண்ணுச்சாமி அய்யரவர்கள் இயற்றியது.

மாமானைத்தேடிய மோன்வளர்கண்ட மானகர்வாழ்
கோமானிடத்தோனி ரங்கயற்கண்மணிக் கோமளைமேற்
பாமாலையைப்பொருண் மேவப்பணித்தனன் பாலகவி
காமாகலந்திகழ் காரைச்சிதம்பரன் காதலனே

---

## சாற்றுகவிகள்.

இராமபுரம் மகா-ா-ா-ஸ்ரீ

### சு. ராமசாமி அய்யரவர்களியற்றியது.

கருர்பொழுதுகுலவு கண்டனூரா லயநீலகண்டமருசுந்தரேசக்
கடவுளொருபங்கலவளாமீநடசிமீதிமசணிநயமேரணபகொண்டே
மேயருாரங்கவிணையணைபதும்மகதுசீககாமைநசமெழிவவாலசுபரமணிய
னெனனுபமைநாவலனேருக்ஷணயைநவொயிட்டபிள்ளைககவியதா
சீருபரபரகுமதுமெசப்பிருஜீனறமெபாபுசீடமெபரிதுவசகுமகளெனசாரு
செயயசானமேருமெனனகமேக—டகாமெபனறுவனைசிறகொதியறகையா
வாரூதனதுபபவலி தராயலக னடமகிழ்விணிறசருணைபுரிக
வாநமெதாழுகுவாரிதியனமூழ்கனபாமேபோற்றைமெயனமனோரனுவை
[ககவாரே

---

தேவகோட்டை மகா-ா-ா-ஸ்ரீ

### ஆ. பஞ்சாபகேச அய்யரவர்களியற்றியது.

கருக்கண்டனுப்புகா வண்ணம்பதமெற் குகந்தளிக்குந்
திருக்கண்டனூராவள ரங்கயற்கண்ணி திருச்செல்விகளே
உருக்கண்டனங்கன மகிழ்வாலசுப்பிர மண்ணியனோ
குருக்கண்டனதிசமுபிள்ளைத்தமிழினைக் கூறினனே.
கண்டனூராங்கயற் கண்ணிதமிழைக்கேட்டு
வண்டமைரயிற்புக்தியுமே மாலானை—கண்டதொரு
நாமகளுநாவில்லேனென்றுளந்நாளநந்தன
மாமண்ட லம்புனைந்தான் மற்று.

---

குன்றக்குடி மகா-ா-ா-ஸ்ரீ

### அப்பாப்பிள்ளையவர்களியற்றியது.

மண்டணிணீரகொண்டெல்பன் மடங்குதவுதல்போல்வாணி
விண்டுருவனபுகொண்டு மிகுந்திருவருளைநல்கக்
கொண்டமுற்குலத்தோன்வால சுப்பிரமணியக்கொண்டல்
கண்டனூரம்மைபிள்ளைக் கவிமழைபொழிந்ததன்றே.

---

சைதாபுர ஆதிநாதவித்வானான பசா-ா-ா-ரி

மு. விசாகத்திரக் கவிராயரவர்களியற்றியது.

சீர் [illegible] குரானைத் தளக்கார புலமையிசை
  செறுக்கினரி கரிடையயங்க
செந்தா[illegible]ருந்தாநிலகமென வுபாகரைடனாநிலரா,
  சிங்க கடநகணணிமற
செருமையி குலவுமுரு கப்பிரா[illegible]
  மெயமைய புனை தலிபான
சேட புறு பிணிசாத தப[illegible] கவிசமரையிரு
  பெருந்திறசமசவி னமாநி
யினைசய[illegible]சம் ருகா சன [illegible] துமும் செய்நல
  விதிமயனச்சனய மெடிய
மெய் வுறறுமய[illegible]கிு வருமாநாகதபியல
  ரெனிட படத துபமகாளவாணி
பருவுமறைவயறு வுள்ளடஙகிட வணடு
  மாலக மெ[illegible]ரோனறுமம
வைடபிழ்சசிமெரானறு கலைமுனியலோய்
  செிந்துற நிகழுந்தனனரோ

சாத்துகவிகள் முற்றிற்று.

௨

செயிசகாயம்.

கண்டனூர்

# ஸ்ரீ ஆதியம்மை

# பிள்ளைத்தமிழ்.

---

## விநாயகர்துதி.

[illegible] கொண்டிகடைநாளி
[illegible]
[illegible] கடக்கிமே
[illegible]
[illegible] வைத்தாத்தாக்கவர்த
[illegible] படிகக்க
திடங்கட்டழகியாங் கண்டனூர்வளமியரு
ளெழிலவழிபும விழிபைம்பொன்ன
நலதுமாமனென்றுமான சஞ்நிமிசைத்திடவளமோ
னபமைமேற கூறுமின்மேசு
யழகியதமிழ்ப்பயிர் தழைக்கத்துதிக்கையா
லள்ளியருண் பதமாரியைச்
சலசலவெனப்பொழியு முகமுமொருகரியாச்
சமைந்துநற் றந்தைதாய்க்குத்
தக்கபொருளாய்வந்த சித்திக்கணேசனிரு
சரணமுடிக் கணிகுவாமே. (க)

### அவையடக்கம்.

உயிர்கள்பலவற்றினை யறிவுடையசீவர் தமு
    ளுறுபாப புண்ணியமிசிரத்
தோடிகத்துற்பவொரா தன்மைபாற் குரோதந
    வுரநாமு மிணையதாயப்
பயல்பொழிபொருட்பாவு சுயபாவுமிணையாய
    பொருந்துமென முன்னியதுரா
புரிபோனினைத்துச் செழுங்கண்டனூர்க்கட்
    புகர்துகாந் தமிழ்டிமேவுங்
கயலவிழிமிசைச்சொலும பிள்ளைத்தமிழ்ப்பெருமை
    காட்டநா னெண்ணிலெவகக்
கலுழன்முனமற்பமசகந்தானித் திருசிறைற
    களைக்கொட்டு நீர்மைபோலா
மியலபாபுமெனபெயர்க் குரியதமிழாகையா
    லெவ்வறிவு நண்ணியேமே
விட்டதுபெருமபுலவர் சொல்லலாற்பொருளோக்கி
    லென்போலு மவராவரோ. (உ)

---

## காப்புப்பருவம்.

### திருமால்.

உததியேழினுமடங் காமடங்காவிசையி
    னுருவான தும்பெரும்பா
லுள்ளதுந்தன்பாலி லுற்பத்தியாய்பொருட்
    கொளியதன் னிறமீந்ததும்
முதல்வனழகுக்கழகு வாயப்பவிடமுதவிநல
    முதமுமோங் கினதுமாமிம்

முனைபராபரக் கிளிப் பாகுநமபனைவிதன்
முப்பிலமுழு முதற்றெடுமை
மதமலர்ப் பருகாகு மாகுரிதுவெள முன்னரி
வளியநவு பாற்கடற்கண
வந்துரணவளாபரசை மாகொக்கமாலுக்கு
வாய்பட்ட செழுப்பசங்கீத
இயக்கவும்பொழில்சூழ் கண்டனூராககரசிறை
புத்தாருணதநபச்சை
பநுவாயநதமீன மேலா சனபாரசத்தியெம்
பூளையவரி ஒறையுமையைப்ப. (க)

## பரமசிவன்.

இங்காக்குமங்காக்கு மங்காககுநாகினிடை
யென்னமானிடருளறமமான்
வேறுயபுரிந்திடாச் சனமிகளைவனமனத்
தியம்பிவந் தாதாகட்டி
யுங்காத்துமவாட்டியுந் தோடடியான்மாட்டியு
மொறுத்துந் தழித்துநாமென்
றொருவருக்கொருவருறா யாடியுந்தெறுவரிஃ
துணைமையென் றளவிலாநா
ணங்காப்பையெண்ணியுறா செய்துயதைகயெண்ணுக
நாயினேன் றுய்வதறகோர்
நன்மருந்தாய்வந்த கண்டனூர்ச்செல்விதனை
நாடொறு மகிழ்ந்துகாக்க
செங்காத்தவார்சடையி னதிகாத்துநோமிளந்
திங்கள்காத் துச்செழிபசுந்
தேனொழுகுகொன்றையுங் காத்தடியர்தம்மைத்
தினங்காத்த பரமசிவமே. (உ)

சித்திவிநாயகர். வேறு.

புந்திபாற் பெரியர்சொற் போற்றியே
பொன்றுறுப் புகழுடை நாகரும்
மந்திபோற் றிரிவருட் காட்டுளே
வந்திடாக் களிற்றிடைத் தோற்றுமோர்
தந்திநாட் கடிமலர் போற்றுதும்
தங்கைமாற் கெமதுநற் பாக்கியை
கந்திதேக் குயர்விணிற் றுக்கினீர்
கண்டனூராக் காசினைக் காக்கவே. (௫)

முருகவேள். வேறு.

முடிபொருபதோன்றியார்க்கு மறசெயவிளங்குபோகப
மூவரிவரைமுனிந்துமூர்க்கனை
முளைநிருதனன்றுதோற்க வடுகணைபொழிந்தமாற்கு
முறையின்மருகனசிரோட்டமாய்
நடமிடுசிகண்டிமேற்கு லவியவொருகந்தமூர்த்தி
நவமணியில் வந்தபேர்க்குளே
கனிவலிபொருந்துதீர்த்த னுருவனிடமைப்புகூறத
நதியருமை மைந்தன்மாட்சியார்
படிகமலையென்றவேற்றின் முதுகிடையமர்ந்துநிற
பவளமலை யொன்றுகூட்டியே
பசியமலைவந்ததேய்ப்ப வருள்விழிதிறந்துவாய்த்த
பவனிவரு மொன்றைமாய்ப்புரு
வடிதமிழ்தெரிந்தபாக்ய வதியையுணர்கின்றபேர்க்க
வதியையடர் கொம்பைவாழ்த்தியே
வளர்திருவிருந்துநோக்க வளமிலகுகண்டனூர்க்கண்
வருமுமையை வந்துகாக்கவே. (௬)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

நான்முகன். வேறு.

எண்ணப்படாக்கோடி சன்மங்களவனியி
 லெடுத்தெடுத் தெய்த்துமைக்கரை
காணாத ரிவ்வளமானுமவ் வளமானமுளதான
 தெநுகொவ நன்றிங்கிளைவைப்
பண்ணப்பாடார்களொரு காற்சரணினைப்போற்
 பாசக்க ரத்திபமனுள்
பற்றுநாள்வலிபவந் தனபிறுள்கண்டனூர்ப்
 பவாநெடுங் கொடியுமீறு
ஞணணப்படாவமுத மன்றுளெனும்பச்சை
 போதிமத் தைக்காக்கவெம்
முள்ளத்துளுள்ளுதுங் கள்ளொழுகுநளினமீ
 துள்ளவெள் ளோதிமத்திற்
பெண்ணரசியானகலை மாதொடுந்தங்கிப்
 பிறங்கியோ கத்தைநீத்த
பின்புலகியாவையு மளித்தளியைமருவுமொரு
 பிரமனிரு மலரடியையே. (௫)

தேவேந்திரன். வேறு.

விரிசிறைமயிலென நடமிடுசெயலினுண்
 மெய்க்குந்திலோத்தமை முதற்பெண்கள்யார்க்குமே
வியபலபணியிடு சசியெனுமொருமயின்
 மெய்க்கின்பம்வாய்ப்ப மருவிக்கொண்டமூர்த்தியோ
டுரியவமரர்தொழ வரியணைமிசையம
 ருக்ரன்கடாக்களி றுகைக்குஞ்சிலாக்யவா
னுருமொடுறுமிய புயலெனுமயமதை
 யுய்க்கும்பராக்ரம மிகக்கொண்[illegible]ழ்க்கைமால்

MAHAMAHOPADHYAYA
...IYER LIBRARY

திரிபுரதகனியை யிபமுகற்கிடையுறை
  திக்கெங்குமேத்துமை யைக்கொஞ்சிவார்த்தையாற்
றீனமொருமுருகனை யழுகுரறணிபரு
  சிக்கின்றதாய்ச்சொல் யமர்த்துமபிராட்டியைப்
புரிசடையிடைநதி புனைவரனணிபல
  புட்பங்கொள்வார்க்குழ லிணைபக்கொண்டவாற்பொழி
புனனிறைவயலிடை யெழுநயனதியுகள்
  பொற்கண்டனூர்க்கர சியைக்கண்டுகொக்கவே. (௬)

## திருமகள். வேறு.

அறுகாலினங்கள்சென் னளினங்களிற்புருக்
  தப்பாற்கிளம்பலாவி
யரிவையளவற்றதங் கைகளாற்றிரள்கமுங்
  காடலைக் காட்டுமேரி
மறுகாலினும்பெரிய வாய்க்காலினுங்கமல
  மண்டிவண் டலைமேவுதன்
மன்னுமப்புவிமாது மின்னெழிற்புயமீது
  வார்தரவ லங்கரித்த
திறமானதவளமெல் லறுவைமீதிற்கந்த
  நிகழ்சந் தனக்குழம்பை
நிறையக்கரைத்தாட் டலைக்காட்டுமிவைபோல
  னேகநய மேவியேதென்
மறுகார்பொழிற்கண்ட னூர்ச்செல்வியைக்காக்க
  மாலகல மகலாதுமின்
மணியானமறுமணியொ டுங்கலந்திலகுமம்
  மணியே திருத்தெய்வமே. (எ)

## கலைமகள்.

வல்லியெனுமோர்தாளி னீரினுற்பவமாகி
வந்தநாண் முதனின் றுவிண்
வருமிரவிகிரணமல துணவொழித்துச்செய்த
மாதவப் பேறிதென்றே
சொல்லலைபோலளியொலித் தெழுவெள்ளைநளினமுந்
துத்தப்பெ ரும்புணரிமேற்
றோன்றுவோனெனவனவன் றோன்றலிருவருளுந்தி
தோன்றுவோன் றுய்பநாவு
மல்லுநற்பகலுமுயர் பீடமெனவீற்றிருந்
தடியர்பல நாவினுஞ்சென்
றளவிலாப்பீடமாக் கொண்டபொருள்யாதோ
வதைக்கருதி யாங்கடொழுவேந்
தல்லிபாய்க்கண்டனூர் தனிலெழுந்தருளியிச்
சகமெலாய் காத்தபூர்ன
சந்திராதபவதனி நந்திவாகனிநளின
சரணியைக் காக்கவென்றே (அ)

## காளி.

கூட்டக்கொடும்பேய்கள் வாய்விட்டாற்றிவெஞ்
சுழல்காற் றிடைப்பட்டுகிர்த்
தூளியாய்ப்பாழான பஞ்செனவுமஞ்சினந்
தொக்குவாய் வைத்துறிஞ்சுங்
குட்டத்துளேகரைத் திட்டமணமற்றவிங்
குவினையொப் பாகியுந்தங்
குடியுமற்றடியுமற் றுருவொழியுமாறுருக்
கொண்டகங் காளிகாளி

நெட்டயில்பிறங்குமுத் தலையுடைப்படையேந்தி
நிமிருமெண் டோளியடியார்
நினைவின்படிக்கினிய வரமுங்கொடுத்துமுனார்
நிற்குமா தங்கிகாக்க
வட்டமார்தரணியணி பொட்டானகண்டனூர்
வாழ்வைவாழ்க் கைப்பூழியன்
மடியிற்குழந்தைவடி வாகிவிளையாடுமெம்
மரகதக் கொடிதன்னையே (௪)

## சப்தமாதர்கள்.

உருவமில்லாதுவய தேறியுந்தந்தங்க
ளுள்ளபடி முளையாதுவா
யுமையாயவலெட்ச ணங்கட்கிருப்பிடமி
தொன்றையல் லாதிலையெனத்
தெரியுமாறொருகுழவி யைப்பெற்றபோதுஞ்
செனிப்பித்த தீதிலாத்தாய்
தீம்பால்புகட்டியக் குழவியைவளர்க்காது
தேடாதி ராளைப்போல்
விரிபுமுலகேழுமீன் றெழுதாயரென்னவே
மேற்பெய ரடைந்துசிவர்
வேண்டினும்வேண்டா திருக்கினுங்காத்தருளல்
விதியென மதித்தருளுமப்
பெருமயில்கள்காக்கஙற் கண்டனூர்க்கொருதாய்
பிணிப்பொழித் தொன்றையன்பர்ப்
பேணியருள்செய்தகா யெந்தாய்மலைக்கரசு
பெற்றெடுக் குந்தாயையே (௫)

முப்பத்துமூவர்.

பண்டாதிமூலமே யெனமுதலைவாயினுட்
படுப்ப டாததுண்பப்
பட்டுவீறிட்டலறு மொழிசெவியிடைப்புகப்
பட்டும்ப ராமுகமுறிற்
றிண்டாடியுயிரைவிடு மிபமெனமனத்தினுட்
டேர்ந்துவிடு கணையுமொவ்வாச்
செய்கையிற்கடிதுசென றிகறடிந்தத்தியைத்
தேறறியாண டருள்செய்முன்னோர்
வண்டானமாற்கிளைய தங்கையாயுங்கோடி
மதியமொரு பச்சைவடிவாய்
வாந்தாயுநதவரு கந்தாயுமபொதிய
வரையுடைய மன்றவத்தாற்
கண்டாவலங்கொண்டிரு கரத்தாலெடுக்கவளர்
கண்டனூர் வாழ்வையென்றுங்
காத்தருளமுப்பத்து முக்கோடிதேவரைக்
கருதிநெஞ் சுருகுவோமே (௰க)

காப்புப்பருவம் முற்றிற்று.

---

## செங்கீரைப் பருவம்.

ஒவ்வாததேவர்க ளனேகருன்வடிவழகை
யுன்னித் திருட்டிவைப்பா
ரொருவர்கண் போலல்ல வாடிடேனியாட
வுன்னிற் கரும்பணியினூற்
கவ்வாதமதியொடு கலந்தவுடனெனக்
கதிர்முத்த மணியவெயர்வை

காணுங்குதழகிய குறுங்களங்கிமிர்த்தவைவு
காட்டலாற பிடரிடத்தே
பெவ்வமெள்ளளவும பொருந்தாதராய
ரிரணடியிணையு மலர்பூவிதென
வெண்ணிவைத்தாயுற வழுத்தநிறைவகுரோ
மிவைகளு மடைந்திடாது
செவ்வாம்பலவாயிடைச் சிராமபமொளிவிடச்
செங்கீரை யாடியருளே
செறிவயற்கண்டனூர் வளர்விழிக்கெண்டையாள்
செங்கீரை யாடியருளே (1)

நெற்றியிலணிந்ததில தமபொட்டெனு நில
நிறமுடைய மதியையுச்சி
நின்றிடைவிடாதுநாண பறறுவெவனென்றவ
ணெருங்கீள் வகிரெடுக்கப
பெற்றவளகத்தினமா தரமுனாதவெதாங்கிப்
பிறங்கிட வலங்கரித்த
பெற்றிசோசுட்டியெனு மரவாடமதியோனற
பிறையெனும பணியுமாடச
சுற்றுமியலவாய்நதுசெம மணிகுயிற்றிபபுறஞ்
சுடர்பரப் பிச்செவிக்கட்
டோற்றுதோட்டணியொடு மிணைத்தமகரக்குழைக
டொங்கிக் குலுங்கியாடச்
சிற்றிடைப்பொற்சதங் கையுமசைந்தாடநீ
செங்கீரை யாடியருளே
செறிவயற்கண்டனூர் வளர்விழிக்கெண்டையாள்
செங்கீரை யாடியருளே (2)

விளைவித்தையிற்பெருமை பெற்றடங்காவலிப்
மேன்மையும் பெற்றுமண்ணும்
விண்ணுநடுநடுங்கிடும் படியானதிடவரமும்
வீரமும் பெற்றுமாயக்
கலவிபுரிந்தோரகந்தைகெடப்பாவியாலுணர்து
கட்கடைக் கினியரான
சலமாதுபாற்கடற் கமலமாதைமபொழிற்
கற்பகத் துவையுமாது
நூலவேளையிற்சனத் துணியங்கலச்செறிய
நாணைசந் தாடாவென
நாபகனைமைத்தவா னைத்திறனுமவ்வாறு
நண்ணுதொனத் தெற்றலபோற்
செலவக்குழந்தையாய் வந்தவதரித்தகொடி
செங்கீரை யாடியருளே
செறியவபர்கண்டனூர் வளர்விழிக்கெண்டையாள்
செங்கீரை யாடியருளே (௫)

நீறணிமையணிபடியர் நினைவிலணியணியணியி
னின்றபா வங்களெலா
நிர்த்தூளியாக்கியப ரர்துவசிலாக்கிய
நிராமய நிராதாரமாய்த்
தோற்றிச்சடாதார மேற்பட்டுநிற்குந்
துவாதசாந்தப் பெருவெளித்
துன்னுமன்னியவத்து வேறிலாச்சிவமே
துலங்குமே பூருவுகொடுமுன்
னேற்றுருவெடுத்ததிரு மாலைக்கலத்தல்போ
லீர்ங்கருங் கடலடைந்துண்ம.

டெழுமெழிலினைக்கண்டு செழியமரகதமயி
லிருஞ்சிறை விரித்தாடல்போற்
சேற்றுவசமின்னுமெய்ச் செழியனெனுமான்முனஞ்
செங்கீரை யாடியருளே
செறியவயற்கண்டனூர் வளர்விழிக்கெண்டையாள்
செங்கீரை யாடியருளே (௪)

ஆராலுமளவிடற் கரிதாந்திருப்பாய
லாகியிப் புவிபரிக்கு
மாயிரஞ்சுடிகைப் பணாடவிப்பாந்தள்வாக்
கைஞ்ஞூற்றி ரட்டியாலு
மோராயிரந்தர மெடுத்தெடுத்துரைசெயினு
முரையினுக் கப்பாலதா
யோங்கியெவ்வுலகத்து முளசிவகோடிகளி
னுதயமரணத்தை நீக்கித்
தாராளமானபே ரின்பத்தையெளிதினிற்
றந்தமந் தாகினிப்பேர்த்
தையலும்யமுனையு மிசைந்தலையினலலைக்
தாடிவரு நீர்மையேபோற்
சீரானமணிவடம் பைம்புயத்தாடநீ
செங்கீரை யாடியருளே
செறிவயற்கண்டனூர் வளர்விழிக்கெண்டையாள்
செங்கீரை யாடியருளே. (௫)

வேறு.

கன்னற்கி ை யிடை கனுமிக்குளவக்
கனுவி னினிப்பாகக்

காணுந்தேனங் கேதக்கன லுட்
    கமழிர தத்தேனும
பின்னப்படுமோ ருலைபுளிட்டுப்
    பிரிக்கா விடினவாரா
பிரியப்படுநின் வாய்த்தேனளவில்
    பெருக்கா மதுநேரா
வின்னத்துவித மெனுந்தேறலையுண்
    டெளிமெய முப்ந்தின்றே
யேறிப்பெருவீ டமரவசைந்தா
    டியபூவ கொம்பேபோ
லன்னப்பெடைநா ணடையநடப்பா
    யாடுக செங்கீரை
யண்டர்கள்போற்றிய கண்டனல்லூர்க்கொடி
    யாடுக செங்கீரை (௬)

சென்னியின்மீதணி செம்மணிவெண்மணி
    சீர்மைய தாளமணி
சேரவிழைத்திடு பொன்முடிமீதெழு
    திவளொளி பளபளென
மின்னியருக்கனை நீதுணிபடுகொடு
    விட முறு மரவாலே
மெலிவையடைந்தனை நானதைமாலையின்
    மேவினே னதனாலே
நின்னிலுநானதி கமமெனவோதிமு
    ணினறு டுதலேபோ
னிகழ்கின்றதுவென வுலகம்புகழ்கா
    கேசி னசைத்தாட

வன்னியவத்துவி லாதபெரும்பொரு
ளாடுக செங்கீரை
யண்டர்கள்போற்றிய கண்டனல்லூரக்கொடி
யாடுக செங்கீரை. (எ)

சந்ததியித்ததி தாவெனுமன்பர் தமைக்கூ யிக்கணமே
தந்தோமெனவுரை தந்தாடியமயி லாடுக செங்கீரை
யிந்தனம்விற்றவர் மைந்தரெனப்பக ரிருவர் தமக்குள்ளே
யிளையவன்மீதினி லுளமதியானவ ளாடுக செங்கீரை
சுந்தரர்பங்கி லமர்ந்தருள்சுந்தரி யாடுக செங்கீரை
சோகமெமைத்தொட ராதடர்கிற்பவ ளாடுக செங்கீரை
யந்தமுமாதியு மல்லதுமானவ ளாடுக செங்கீரை [ரை.
யண்டர்கள்போற்றிய கண்டனலலூர்க்கொடி யாடுக செங்கீ

மகரக்கொடிவர னருமைத்திருமக ளாடுக செங்கீரை
வஞ்சமனத்தி னிடைஞ்சலைவைப்பவ ளாடுக செங்கீரை
பகரக்கரமுக லுருவைப்பெறுபவ ளாடுக செங்கீரை
பவளச்செழுமலை விழைபொற்பசுமலை யாடுக செங்கீரை
யிகமெய்ப்புறவரு மிகலைத்தெறுபவ ளாடுக செங்கீரை
யெங்களுளங்களி பொங்கவருங்கிளி யாடுக செங்கீரை
யகிலத்தெவரையு மடிமைக்கொளுமயிலாடுகசெங்கீரை [ரை.
யண்டர்கள்போற்றிய கண்டனல்லூர்க்கொடி யாடுகசெங்கீ

கண்டனல்லூரில் விளங்குசுமங்கலை செங்கோ செங்கீரை
கன்னினுநினைபவ ரகவெளிநிறைபவள் செங்கோ செங்கீரை
வண்டடர்குவளை மலர்ந்தபுயக்கொடி செங்கோ செங்கீரை
வளைபூணியலுள மகவாய்வளர்பவள் செங்கோ செங்கீரை,
தொண்டைநறுங்கனிநேர்ய்முகமண்டலி செங்கோ செங்கீரை
துடியொத்திடைசிற்றிடையுற்றொளிர்மணி செங்கோசெங்கீரை

மெதன்மழலையானதி கொண்டவர் மாநிதி செங்கோ செங்கீரை
யிலபராசனகுடி தழையவளர்ந்தவள் செங்கோ செங்கீரை(ய)
செங்கீரைப்பருவம் முற்றிற்று

---

## தாலப்பருவம்.

தங்கபய்ப்பா வையும்யானைத்
    தந்தபப்பாவையும் மேலுந்
துவிட்டாலமைத்த பதுமைபுநீ
    தந்தானுண்டபெனை வழுது
செங்கைவருந்தும் படிபெடுத்துச்
    சென்றேவெளியி லபல்விட்டு;
செல்வப்பேதை மகளிரொடுஞ்
    சேர்ந்தாடினையச் சமயமறந்
தெங்கேயோவைத் தவைகளைத்தா
    வென்றுய்வருமோ கண்மணியே
பெனமுன்மேனை பாராட்டி
    யிடிக்கியெடுக்கு மிளங்குழந்தா
யிங்குமொளியா யெங்குமதா
    யெழுந்தாய் தாலோ தாலேலோ
யின்பக்கடலே கண்டனகர்க்
    கெழிலே தாலோ தாலேலோ (க)

கறைதுன்மிடற்றுற் போழகைக்
    காட்டிக்கணவன் வசம்படுத்தக்
கருத்தையவன்பாற் செலுத்தியபின்
    கானுங்கிரியுங் கழிக்கரையுங்

துறையுநிறையு முலகமெலாஞ்
 சுற்றுமொருவெள் விடையேறிச்
சுற்றவவனு நீயுமொன்ருய்ச்
 சுற்றித்திரிந்தாயதனாலே
குறையும்பாதி யுடலவன்றன்
 கூட்டைவிலக்கிக் குழந்தையுருக்
கொண்டபினுஞ் சுற்றிடினுங் கொள்ளேஞ்சுகத்தைக்
 கொழுந்தமிழ்நாட்
டிறைவன்கணனே கண்வளர்ந்திங்
 கெழுவாய் தாலோதாலேலோ
வின்பக்கடலே கண்டனகர்க் கெழிலே
 தாலோதாலேலோ. (உ)

நெட்டிற்கனத்தி னகலத்தின்
 னிகழ்ந்தவயிரப் பலகையினை
நேரவிழைத்து நாற்புறத்து
 நீலமணிக்கால் கடைந்திறுக்கி
மட்டுக்கடங்கா மாணிக்க
 மணியைச்செதுக்கி யுட்புறவாய்
வைத்தநெடுஞ்சட் டமுங்குறுக்கே
 வாய்த்தகுறுஞ்சட் டமுமிசைத்த
தொட்டிவிடைச்சங் கிலியாகத்
 தொங்கத்தாள வடம்பூட்டித்
துனைச்சிறுகண் டுயிலென்னத்
 தோகைமேனை துயிற்றவவ
ளிட்டப்படியே திருக்கண்வளர்ந்
 தெழுவாய் தாலோதாலேலோ

வின்பக்கடலே கண்டனகர்க்
கெழிலே தாலோ தாலேலோ (ரு)

குன்றுதுளைத்து மமரார்வெங்
குடியுந்துளைந்து மிமையோர்தங்
கொடியவினையுந துளைத்துமுனை
குன்றுவடிவேல் கொண்டவனு
நின்றமுருக வேளைமடி
நிகழக்கிடத்திப் பினுமவனை
நெடுநாட டாலாட் டியவருமை
நினக்கேதெரிந்து மச்செயலை
யன்றேமறந்த நீதுயிலிங்
கமராயாகி லகங்களியே
மருமைத்திருவே பாணடியனின்
றருளுங்கயற்கண ணாமுதே
யென்றுமழியாப் பெருநிதியத்
திருப்பே தாலோ தாலேலோ
வின்பக்கடலே கண்டனகர்க்
கெழிலே தாலோ தாலேலோ (சு)

பச்சைசக்கிளிக்கு நாகணைவாய்ப்
பறவைதனக்கு மினிப்பான
பாலுஞ்சோறுங் கனிந்தரசப்
பழமுமருந்தும்படிக்கூட்டி
மிச்சச்சோற்றை யன்புடனே
விளையாட்டயருங் குழவிகட்கு
விருந்திட்டருத்தி யிரண்டுபுட்கு

மென்சொற்பயிற்றி யவைகுளறுங்
கொச்சைமொழிகேட் டதியின்பங்
கொண்டனைது மழலைமொழி
குழையுட்புகநா முனைபடரித்த
கோடிதவமீ தெனவுரைத்தவ்
விச்சைக்கடற்குட் படிந்தகேள்வி
ளியற்செய் தாலோதாலேலோ
வின்பக்கடலே கண்டனகாக்
கெழிலே தாலோதாலேலோ (ரு)

வேறு

வேலைத்தரளமு மாமைப்பவளமு
மேவிசசுடாவிசும
வீதிப்பெருவழி மீதுறதிரள்பல
மின்னற்கொடிபேபோல
வாலைப்பருவமி னோபொற்குடபிடை
வைத்தேமொய்த்தேதீர
மண்டுமலாத்தட மொண்டுதிருப்பி
வருஞ்செயலாலன்றோர்
சிலத்துவமையி லாமைக்கயல்விழி
சீருருவங்கொண்டார்
தெரிமின்னெனச்சொலல் போனூபுரமொலி
செய்யுஞ்சிராமலை
ஞாலத்திடையுயர் கண்டனகர்ப்பனை
தாலோதாலேலோ
சங்கரர்பங்கமர் பைங்கிளைமங்களை
தாலோதாலேலோ (கா).

கண்டமுறுமபடுமழை வழிநெடுவாரிதி
கடைபடுமேபபடித்
தோற்றுங்கொடியதோர்
வடவைக்கனலைச் சுளகாஞ்செவிவீசிக்
கொண்டவியபபெரு வளியைபெழுப்பிக்
கோட்டாலவரையெட்டைக்
குத்திமிகபபோத் திட்டெட்டானைகள்
குலையபபடிகூவி
மண்டநடுங்குமபடிவிளையாடிய
வாதிச்சுதனை
வானைக்கமுது கொடுத்துவளர்த்தவ
ளைநதருவேவந்து
தடைலைபாய்வளர் கண்டனகர்ப்பனை
தாலோ தாலேலோ
சங்கரர்பங்கமர் பைங்கிளிமங்கை
தாலோ தாலேலோ (எ)

பிரமாவேபிது காறுங்கூறும் பிறவிக்கிடமாகப்
பெற்றுபலவது பெற்றுயலைநீ பெறுதறகரிதான
வரமேனின்று விடைமலரவாணியு மொருநாலாமோத்து
முற்றும்முற்று வுணரவினைகினை யுயர்வாஞ்சிவதீர்த்தங்
கருமாய்க்குபபடி கற்பகமுதவுங் கதியென்றருள்செய்யுங் [ங்
கயல்விழிமயலவழி யொழுகாதெம்மைக்கடைவழியிற்காக்கு
தருவானிடையொளிர்கண்டனகர்ப்பனை தாலோ தாலேலோ
சங்கரர்பங்கமர் பைங்கிளிமங்கை தாலோ தாலேலோ (அ)

அமுதக்குடம்போற் றொன்றலபற்பல வாரமேலோடூரமோ
டதின்முகவுமுள வெங்கள்சிரத்துன வேதோயபமேனள்

விமலற்கருதி யருந்தவமுற்றதின் மேலானோம்வானோர்
விழையப்புவியவ ருங்கொளமொய்த்தன மீமேமேலேயாடு
நமையொத்திடுதரு வெங்குளவிக்குவி னுமேமேமேலென்றே
நகரிற்கழகிடு தெங்குகள்புக்குவி ணூடேடேநீடுந்
தமிழ்விற்பனர்நிறை கண்டனகர்ப்பனை தாலேலோதாலேலோ
தனையிற்பெருமை விளங்குகயற்கணி தாலோதாலேலோ (கூ)

கனகப்பரிபுர மொன்றுபதத்தின டாலேலோதாலேலோ
கருணைக்குவளை யிசைந்தமுகத்தின டாலோதாலேலோ
வனகர்க்குடலிலொர் பங்கையளித்தவ டாலேலோதாலேலோ
வமரர்க்குயிரையு மன்றுகொடுத்தவ டாலோதாலேலோ
தினமுத்தமர்குடி தங்கியிருப்பவ டாலேலோதாலேலோ
செழியற்கொருமக வெனறுமுனைத்தவ டாலேலோதாலேலோ
தனமிக்கவருறை கண்டனகர்ப்பனை தாலோதாலேலோ
தனையிற்பெருமை விளங்குகயற்கணி தாலோதாலேலோ. ()

தாலபபருவம் முற்றிற்று.

## சப்பாணிப்பருவம்.

அன்னையேயன்னையே யென்னநின்னருகுற்
றடிக்கடி புகன்றுவேறே
ராதரவுமில்லையிது காறுமென்குடியினி
யவதரிக் காதிருந்தாற்
பின்னையோர்வழியில்லை கிலையிலாப்பிறவிப்
பெரும்புணரி யைக்கடக்கப்
பேச்சில்லைச்சில்லை மகவிலாச்சன்மம்
பிறத்தலிற் பயனுமில்லை

முன்னைமுன்னோர்செய்த புண்ணியசொரூபமே
முத்தேயெனத்துதித்து
முத்தமிடுமாறனிரு கண்களாற்கண்டுவகை
முன்னீரப் படிந்தெழுதரத்
தன்னையேதானிகாத் தவள்கண்டனூரம்மை
சப்பாணி கொட்டியருளே.
சற்சனர்க்குற்பவத் தைப்பொடித்திட்டபெண்
சப்பாணி கொட்டியருளே (க)

அந்திபகலகலாது நந்தியாவர்த்தமுத
லானவொரு நாலவகைத்தா
மற்புதப்பூக்கொய் தரன்ருளினிடைவிடா
தர்ச்சித்து நாள்கடோறும்
வந்தியாநின்றவர் வசிக்குந்தெருக்களின்
மாடமேற் சிறுவர்சேர்ந்து
வாசிக்குமாகம முழக்குஞ்சழக்கிலா
மறைமுழக் கும்முழக்கி
யெந்தநாதந்தனி லொடுங்குமோவதின்மே
லெழுந்ததை யிகந்துமேலிட்
டெழுமுதன் மணத்தினெது பற்றுமோவதுமேலு
மிசையமற் றையதுமென்றுஞ்
சந்ததியைவேண்டினர்க் கருள்கண்டனூரம்மை
சப்பாணி கொட்டியருளே
சற்சனர்க்குற்பவத் தைப்பொடித்திட்டபெண்
சப்பாணி கொட்டியருளே. (உ)

கிரணமூற்றுமதிய மேற்கிடந்தொளிர்சடைக்
கிளரொளிக் கற்றைமின்பா

கிரதிபுபமேபபிறங கிபகரளமாலையொடு
மேகபுபபவள பாலைபேபோற
புரளவுங்கண்டவாகள கண்டவாகளயாருமா
புதமிசெந்ன றனைசெரபயவும
புதியநடனபபர் னடிபபனபபோபு தூசதி
புதிபகே யாகுராமுட
பிரமைகொளுமாறுகைக தாளமேமசெராடடப
பிராடடிபா செரிவபெனனப
பிரியமொடுமாறனுநு வாயபாடனைடாகனா
பேதமடை யாதுதாளஞ்
சரணமெனவாதவாக சநளகண்டனூரமமை
சபபாணி கொடடயநுளே
சறசனாககுாபவக நைநமொழித்திடடபெண
சபபாணி கொடடியருளே. (௭)

கெட்டி தபுகசமலமுங சனைவாத்தணநகனை
ஜேனரி ... வத்யபருந
கிறமழுங்கிடாவத திரயமினனாமுகமு
கிசழுகருங குவளையநதன
னிடடநாபகிமுகமு மலரவேவவட்டமிட
... ரியபாற புணரிநாபபண
ணீாட ... ணமெனநலா தெங்கும்பரப்பியீ
... ருமிலை யெனவெழுநதோ
மொட்டு ... த்தக்கலை யாலவிளங்கியமதியு
... ழுமு கத்தழகுவாய்ச்
திட்ட ... ாமணிமேனை கநதனுண்பாற்சோற்றி
... ார வியகாரத்தாற்

சடடிமாவுண்டவனை யருள்கண்டனூரம்மை
சபபாணி கொட்டியருளே
சறசனாக்குறபவத் தைபபொடித்திட்டபெண்
சப்பாணி கொட்டியருளே. (௪)

தேவாதிதேவா குணாகராவரதா
திகம்பரா கானலோலா
தீனசெனரெட்சகா செங்கோலிலாதரசு
செயயுமொரு சூரபன்ம
னோவாமலெங்களைச் செய்ததுயரத்தினு
லுயிரிருந தாறபோதுமென
றுலகெலாஞ்சுறறினை மஞசேலெனப்புகலவ
ரொருவாகளு மிலலையினறே
காவாயெனத்தேவா கதறிமலரடிவிழக்
காக்கவக் கடவுளெவனைக்
கருதினுனைவவனை யனபாயெடுக்குமிரு
கைகளா லன்பருக்குச்
சாவாவரங்கொடுத் தருள்கண்டனூரம்மை
சபபாணி கொடடியருளே
சற்சனாக்குறபவத் தைபபொடித்திட்டபெண்
சபபாணி கொட்டியருளே. (௫)

குலமென்னநிலமென்ன பொலமென்னவழிவழிக்
கொணடகூத் திரமுமென்ன
கோத்திரமுமெனனநீ கூறெனபபின்னுங்
குடிபபெயரு மென்னவாசத்
தலமென்னவென்றுகேட் டுலகிடைத்தானின்ற
தையலை யளிப்பரெந்தச்
சாதியருமிப்படிக் கலலாதிலங்தொறுந்
தாழ்ந்தபிச் சைக்குவந்த

நலமிலாக்கொடியவை ணவனுக்கருஞ்சுதையை
நல்குமுனார் விற்கிசைந்த
நற்றுதையும்பிறரு மானந்தவாரிதியி
னண்ணவெண் ணியகௌரிமின்
சலமொழித்தவர்மருவு கணடனல்லூரம்மை
சப்பாணி கொட்டியருளே
சற்சனர்க்குற்பவத் தைப்பொடித்திட்டபெண்
சப்பாணி கொட்டியருளே. (சா)

வேறு.

இங்கிதமங்கள மங்கையர்நித்த
மிருக்கு மனைப்பூவா
ரின்பமிகுஞ்சிவ மென்றதடத்தமி
ழித்தல மிக்காநீ
யங்குறையுன்குறை யன்றழிவைப்பெறு
மத்தரு ணத்தேநா
மன்பொடுநின்புடை வந்துவரத்தை
யளித்து மெனக்கூறுஞ்
சங்கரிநின்றுகள் கெண்டைவிழிக்கொடி
சற்சன ரெப்போழ்துந்
தந்தமனங்களி பொங்கநினைத்திடு
தற்பெரு மைக்காரி
குங்குமநிம்பம ரங்களிடத்தடர்
கொப்புக ளிற்கூடிக்
கொண்டல்பொழிந்தெழு கண்டனகர்ப்பனை
கொட்டுக சப்பாணி. (எ)

தாமரைமாமல ராதனமானபி
தாமகன் வாழ்வுகளுஞ்
சத்துருவர்க்கமி றக்கவுடற்குவி
ரத்தைபெ றத்தானு

நேமியின் மானிடர் யாவருமேவிட
நீடிய தேவர்களுந்
நித்தநயத்தவி தத்தையுறும்படி
நீதிசெ லுத்தியெழின்
மாமயினேர்சசி போகம்விடாதமர்
மன்னவன் வாழ்வுகளும்
வருமொருநொடிதனி லழிவுறுமிவணென
வாயி னுரைத்திடல்போற்
கோமளஞான மனோன்மணிமீன்விழி
கொண்டவண் மண்டியநீர்க்
கொண்டல்பொழிந்தெழு கண்டனகர்ப்பரை
கொட்டுக சப்பாணி. (௮)

பாரிற்பலபல சீவத்தொகுதிகள்
பாவிக்கலியாலே
பாழ்பட்டலமர நாமித்ததியருள்
பாவித் திடலின்றே
லாருக்கிதின்மன நாடப்படுமிஃ
தன்றியு நாமீன்ற
தாகுமெனப்பரி தாபமிகுந்தள
வற்றபொ ருட்டேடிச்
சீரிற்பொலியற நாலெட்டையுமெளி
திற்காஞ் சியிலேயத்
தினம்வளரப்புரி யிருகையினாற்றுதி
செயுமடி யாரெண்ணுங்
கோரிக்கையைநிறை வேறச்செயுமயில்
கொட்டுக சப்பாணி
கொண்டல்பொழிந்தெழு கண்டனகர்ப்பரை
கொட்டுக சப்பாணி. (௯)

மந்தரமந்தர மன்றதுகொங்கை
மருங்கு லெனபபூமேல
வந்தவள்வநதவண மாமனுமானவள
வாரிதி மீதூருந
நந்தனநநத நயநதருகணடமு
நடையு மடைநதாளாய்
நண்ணிப் பஞ்ச தருக்களை வெளவிய
நற்கொடி மானமபோ
யநதரமாகிவி டாதருள்கணணனு
மாயர் குடிச்சேயே
யாகியுமகிழுவொடு கொட்டினனீயுய
ரரசன் சேயாமே
கொந்தளகத்தி சமாததிநயத்தொடு
கொட்டுக சப்பாணி
கொண்டலபொழிநதெழு கணடனகர்ப்பனை
கொட்டுக சப்பாணி. (ம)

சப்பாணிப்பருவம் முற்றிற்று

## முத்தப்பருவம்.

ஆவற்கிசைந்து தென்றமிழ்நாட்
டரசியரினருகினைடைந்
தாசுந்தானும் வலங்கொடுபின்
னரியவிரத மெடுத்தேதென்
றேவர்க்கியைவ தெவையவைகள்
சிறப்பிற்புரிந்து வரங்கொடுக்குந்
தெய்வங்களையுந் துதித்திறைஞ்சுஞ்
செய்கைக்கிரங்கிச் சேயாய்வந்
தாவிப்பயிர்நா டொறுந்தழைப்ப
வமிர்தமழையைப் பொழியுகின
தருமைம்மழலை யிறைவாயா

வடியேமுயிருந் தழைத்தோங்க
மூவாக்கநருளுங் கண்டனகர்
முதலேமுத்தந் தருகவே
மொழியிற்செழுந்தே னொழுகுமதி
முகத்தாய்முத்தந் தருகவே. (க)

கழியிற்பழகும் பரவர்கள்பாற்
கட்டிக்காத்துப பருவமுள
காலம்பார்த்துக குழுக்கூடிக்
கனத்ததுரைமா ருத்தரவும்
விழைபாப்பெருவா ளைகளுழக்க
மேகத்திரணீர் முகந்துழக்க
விரிந்தகடற்கட் பிரயாச
மெத்தவெடுத்து வெளியேற்றிக்
குழியிற்படுத்த விப்பியின்வாய்க்
குலவிவருமுத் தமுங்கோடி
குற்றம்பொருந்து மலலாளின்
குளிர்வாய்முத்தந் தனக்கிணையோ
முழுவிற்பனர்சூழ் கண்டனகர்
முதலேமுத்தந் தருகவே
மொழியிற்செழுந்தே னொழுகுமதி
முகத்தாய்முத்தந் தருகவே. (உ)

காலக்கொடுமை யாலொருகாற்
களித்துச்சுவர்க்க வீதியின்வாய்க்
கனம்போற்பதினெண் ணியமுழக்கங்
காட்டவொருகாற் கோட்டினிகல்
சாலப்பெறும் மதத்தவளத்
தந்திப்பிடர்மேற் பவனியைந்து
தருவான்வரவாங் கொருமுனிவன்
சந்தித்தருள்பூ வலங்கவிழுற்

கோலத்தொடுசெல் வமுமழியக்
குளிர்பாற்கடற்ருய் மறுபடியுங்
கொடுத்தபுதிய வமுதைபுமயாங்
கொள்ளேமுலக மெவைகளுக்கும்
மூலப்பொருளே கண்டனகர்
முதலேமுத்தந் தருகவே
மொழியிற்செழுந்தே னொழுகுமதி
முகத்தாயமுத்தந் தருகவே. (௩)

அல்லும்பகலும் பெரியவர்செய்
யரியதவத்தின் றிறலாலு
மடங்காதவரை யடக்கியிறை
யவனியாண்ட விறலாலுஞ்
செல்லுமினிச்செல லுதுமென்னத்
திரைவாய்கடற்குட் சென்றடைந்து
தெண்ணீர்குடித்துப் பொதியமிசைத்
திரண்டெந்நாளும் பொழிதரலாற்
புல்லுமண்டி வளரவுண்ட
புனிற்ருச்செழும்பால் புகட்டவுண்ட
பொழுதிற்பொதிந்த மணமகலாப்
புனிதவாயாற் கணிகையர்க்கும்
முல்லைசெழிக்குங் கண்டனகர்
முதலேமுத்தந் தருகவே
மொழியிற்செழுந்தே னொழுகுமதி
முகத்தாய்முத்தந் தருகவே. (௪)

மாக்கம்பனுக்கு மெதிர்த்தவர்யா
வரையுமடக்கி வரையடக்கி
வரையையடைந்த பெரியவரை
மாலுங்காள மேகமென

மாக்குங்கவிகே சரிதனக்கு
மரிதாயருளி யமலைவடி
வானோர்பலருக் கனுதினமு
மருளியருளே பழுத்ததனாற்
சேக்குமுனது செழும்பவளச்
செப்பேயனைய திருவாக்காற்
சேற்கட்டிருவே மலர்மருவே
தினமுந்துதிமெய் யடியார்க்கு
மோக்கமளிக்குங் கண்டனகர்
• முதலேமுத்தந் தருகவே
மொழியிற்செழுந்தே னொழுகுமதி
முகத்தாய்முத்தந் தருகவே. (ரு)

வேறு.

முன்னிமையவரைதனிற் சேயாய்வளர்ந்தகால்
மோகமிகு மன்னைமேனை
முன்றானையிற்கிடந் தினியதுயில்கூர்ந்துபின்
முலையமுத முணவெழுந்து
தன்னடிமடிக்குள்வதி தருகாலெனைப்பெற்ற
தங்கமே முத்தமொன்று
தாவெனக்கேட்டுமுக மொடுமுகமுறச்சேர்த்த
தருணமத் தாய்கபோல
மென்னுமாடியினின் முகங்காட்டியிருசேய்க
ளேதெனத் தநதைபிரமித்
திடுமாறுசெய்துவிளை யாடியதுபோலவே
யிந்தவேளையினுமீன்ற
தென்னனுமயங்கநற் பொன்மாலைகவுளுறத்
திருவாயின் முத்தமருளே
திருமங்கைவளர்கண்ட னகர்தங்குமொருநங்கை
திருவாயின் முத்தமருளே (சு)

என்னுளநாமுநங் கணவனுஞ்சேர்ந்தொத்
திராமலே புவியிடத்து
மியல்வானிடத்தினு மிருந்ததிற்பயனையிங்
கேதடைந் தோம்வண்டராற்
பன்னுளுமதுவுணப் பெற்றேமினித்தானை
பலருநங் கீழ்ப்படிதரப்
பதியொடுமிருப்பமென விதழாம்பலணியுடுப்
பற்கள்செறி முகமதியுடன்
மன்னல்போல்மின்னிமேற் பொலிதரச்சேபாக
வந்தவ தரித்தருப
மானேதனக்குநிகர் தானேவிளங்கியபி
மானம்வைத் தெம்மையாணட
சென்றுறுகூந்தற் செழித்தபைந்தோகையே
திருவாயின் முத்தமருளே
திருமங்கைவளர்கண்ட னகர்தங்குமொருநங்கை
திருவாயின் முத்தமருளே. (எ)

ஆதியிற்கங்கைத் தலத்திற்சரத்தினிடை
யவதரித் திட்டதான
வாறுருவுமோருருவ தாச்சமைந்தாறுவா
யாறுவா யாகவேயிம்
மேதினிக்கண்வளரு மொருசேயைமடிவைத்து
விளையாட் டயர்ந்தகாலை
மிளிர்வதனமொவ்வொன் றினும்முத்தமிட்டொரு
விதத்தினு மடங்காமலெப்
போழ்தினுமடிக்கடிமு தம்பெருகுமுத்தம்
புரிந்தநின் றிருவாயினாற்
போதாதுபோதா தெனப்பெறுமியாங்களும்
புகலவே நான்மறைக்க...

நீதமாய்நின்றபொருள் வலமேவமேவுமயில்
திருவாயின் முத்தமருளே
திருமங்கைவளர்கண்டனகர்தங்குமொருநங்கை
திருவாயின் முத்தமருளே. (அ)

உண்டுண்டிறத்தலென் றென்றுங்கருத்தினிடை
யுன்னியுன் னித்தவஞ்செய்
யுத்தமர்களடைவதொன் றுண்டேயதாயிலகு
மொருதெய்வ மேயினிமையிற்
கண்டுண்டுகண்டசர்க் கரையுண்டுகட்டியக்
காரமுண் டளவிலாத
கனிகளுண்டிவைகளவை யில்லாதமழலையொடு
களிதழீஇக் கொண்டுணர்வையும்
மொண்டுண்டினித்தநின் வாய்க்குநிகராகுமோ
மோனஞா னக்கரும்பே
முத்தநீதார திருப்பதழகல்லவொளிர்
முத்தமே முகிழ்நறும்பூச்
செண்டுமூன் றுடையபைங் கொடியேசெழித்தநின்
றிருவாயின் முத்தமருளே
திருமங்மைவளர்கண்ட னகர்தங்குமொருநங்கை
திருவாயின் முத்தமருளே. (கூ)

வானாட்டரம்பையர்கள் வாயினெழுமமுதமும்
மண்ணாட்டு வேசைமாதர்
வாயின்வாயமுதமும் மறிதிரைப்புணரியை
மதித்தகா லெழுமமுதமும்
மானுதகலகத்தை விளைவித்துயிர்க்கழிவை
யாக்குமல் லாதுசீவர்க்
கழியாதபதவியைத் தருவதாகியபெருமை
யவைகளுக் கேதுதற்குத்

தானே சமானமா கியகின துவாயினமு
தந்தனக் கீடாகுமோ
தையலர்க்கரசியே மையெழுதுமீன்விழித்
தாயே தழைந்தவெற்றிச்
சேனாட்டுகொடிமின் செழித்தபைங்கொண்டலே
திருவாயின் முத்தமருளே
திருமங்கைவளர்கண்ட னகர்தங்குமொருநங்கை
திருவாயின் முத்தமருளே. (௰)

முத்தப்பருவம் முற்றிற்று.

---

## வருகைப்பருவம்.

அமுதூற்றுமதியோடு பாற்கடற்கட்சனன
மானதெப் படிவாய்த்ததோ
வப்படிக்கிப்படி யளந்தவற்கேமனைவி
யானேமெ தன்றிமேலு
நமைரூபவதியென்று மாலுமாலாகியே
நாடினான் விதிவலியினோர்
நாரியைமணந்தான் குரூபியவள்கிடையலா
னடையில்லை யிவைகள்வாய்ந்துங்
கமையொன்றினாற்பதம் பெற்றாளெனக்கமலை
கருதிநெஞ் சம்புழுங்கக்
கஞ்சமலர்நாணுமெல் லடியுஞ்சிவப்பயாங்
களுமின்ப வாரிதூங்கத்
தமிழ்மாறன்மடியேறி விளையாடுமயிலான
தற்பதப் பொருள்வருகவே
தனவான்கணிறைகண்ட னகரோங்கவளரெங்கள்
சபாலோ சனிவருகவே. (க)

நிருவிகற்பச்சமா தியையுற்றபெரியோர்க
ணெற்றிமூ லத்தலத்தி
னின்றுநீள்வுற்றுமே லெழுநாசியிருபாலு
நிலவுமிடை கலைபிங்கலைப்
பெருவழிக்கதவினைத் திறவாதடைத்துப்
பிறங்குசுழி முனைவழியில்வாய்ப்
பேச்சற்றிருந்துபின் னோடாதுவாசியைப்
பிரயாச மொடுநடாத்தித்
தெருளுறமனக்கணுற் கண்டதெதுவோவதைச்
சிறியேங்க ளுங்காணவே
தென்மதுரையரசாட்சி செய்யவருள்செய்யுமொரு
சேயாய்ச் சனித்ததெய்வத்
தருவிளங்கொம்பான மரகதக்கொடிவயந்
தருகயற் கொடிவருகவே
தனவான்கணிறைகண்ட னகரோங்கவளரொங்கள்
சபரலோ சனைவருகவே. (௨)

சுத்தவொளியானதங் கத்தாலமைத்திட்ட
தூபிகொள் விமானமோடு
தோன்றுநின்கோயிலுட் டேவர்நரர்நாகருந்
துன்னிவந் தித்தகாலை
முத்திரத்தினமழுத் தியமணிமுடித்தொகுதி
மொய்த்தலா லொன்றொடொன்று
மோதுதற்கட்சிதறு மணிகள்பரல்போலவே
முன்றிலவா யெங்குமொளிரும்
முத்தமீமலர்மேன் மிதிப்பினுந்நோவுநின்
னுபயபத மாதலானீ
யொதுங்கியொயிலாகவே மெலநடந்தன்னமென
வுலகநித் தியநித்தியஞ்

சத்தெனச்சித்தத் தமைத்தபெருமான்களுட்
டங்குபெண மானவருகவே
தனவான்கணிறைகண்ட னகரோங்கவளரெங்கள்
சபரலோசனைவருகவே. (௩)

வேறு.

பூவிற்றிகழ்வா சனைபோலும
பொனனிற்றிகழுமாற் றுரைபோலும்
பொங்குமழைத்தெண் ணீரிடத்துப்
பொருநதுங்குளிர்ச்சி தனைப்போலு
மாவிற்றிகழ்மான் மியமபோலு
மங்கியிடத்துட் டணமபோலு
மண்டத்துள்ளு மப்புறத்து
மருவாயுருவா யவையுமிலாய்
தேவிற்சிறந்த தெய்வீகச்
செல்வத்திருவே தெவிட்டாத
தேனேயதைவிட் டகலாத
தித்திபபேசற் செழும்பாகே
மாவிற்பனார்சூழ் கண்டனலனூர்
மயிலேவருக வருகவே
மங்காதொளிரு மங்கயற்கண்
மணியேவருக வருகவே. (௪)

கன்னிக்கெதிரி லமர்புரிந்து
கன்னிக்கெதிரை யதிரொட்டக்
காலைபொரவக் துடனேதங்
கடமூன்றனுளொான் றினைக்கணத்துட்
பின்னப்படுத்த வுணர்ந்திதைநாம்
பின்னரடைப்பேங் கடத்துளெனப்
பேணிப்பொருங்கார் மூகசீத்துப்
பெருங்கார்மூகத்துக் கெதிர்விரும்பித்

தன்னுட்குழைந்து தலைகவிழ்ந்து
தனிமாமணமயினை பெறுவதற்குத்
தக்கபருவ மதிகுறித்துத்
தழைந்துவளரு மிளங்கொடியே
மன்னிக்நிலமே கண்டனலூர்
மயிலேவருக வருகவே
மங்காதொளிரு மங்கயற்கண
மணிமேயவருக வருகவே. (ரு)

காய்ச்சும்பாலே நறுந்தயிராய்க்
கடையத்திரண்ட வெண்ணையுமாய்க்
காய்ச்சப்பினனு நெய்யேயாய்க்
காட்டல்போனீ யோருருவே
யீச்சுவரனு முருக்திரனு
மெழிலவிட்டுணுவு மயனுமொழிந்
திட்டாராகு மெவர்களுமற்
றெவையுமாகி யிலகிகின்ற
பூச்சக்கரத்தி சக்கரத்துட்
பொருந்தக்கரத்தி கற்பகம்போற்
பொலிந்தகரத்தி மெய்யடியார்
புரிந்ததவத்துக் கனுக்கிரக
வாய்ச்சொல்லுரைத்த கண்டனல்லூர்
மயிலேவருக வருகவே
மங்காதொளிரு மங்கயற்கண்
மணியேவருக வருகவே. (சு)

சிந்தாகுலமா மிருட்பிழம்பைச்
சீக்குஞானச் செழுஞ்சுடரே
தேயாதோயா தமுதூற்றிச்
செழித்துக்களங்கற் றொளிர்மதியே

நந்தாவனநந் தாவனத்தி
னறும்பூமுடித்து நாயகனை
நாளுமயக்குஞ் சத்தியினு
ளானசத்தி யென்றவளே
யெந்தாயேயென் னுயிர்க்குயிரே
யினியபாகே தவர்களுக்கு
மெட்டாக்கனியே செழியன்மடி
யேறுங்களியே யெளியவர்பால்
வந்தாதரிக்குங் கண்டனல்லூர்
மயிலேவருக வருகவே
மங்காதொளிரு மங்கயற்கண்
மணியேவருக வருகவே. (எ)

அச்சங்கினம்பாற் கடனிகரு
மகழியிடத்து மகழ்தரலா
லகன்றதடத்துந் தடங்கரைவிண்
ணடர்ந்தவேரி யிடத்தினுமேற்
றுச்சம்பெறுநும் மருமகனன்
குதவும்பரிச மிவையாகு
மூங்கள்சுதையல் விகளையளித்
துவப்பீரெனநித் திலத்திரளை
நிச்சஞ்சொரிய விதையுடுப்பா
னிமிடமுனைப்பே மெனத்தடத்துண்
ணின்றுங்கிளம்பி விண்டலத்தே
நேடிப்புகலப் புகுமாபோன்
மச்சமுகளுங் கண்டனல்லூர்
மயிலேவருக வருகவே
மங்காதொளிரு மங்கயற்கண்
மணியேவருக வருகவே. (அ)

ஆராதனைசெய் பழவடியா
　　ரகத்துமகத்து மகத்துவமா
ரகத்துமுகத்து முகத்துமமர்ந்
　　தகலாதிலகும் பேரொளியே
தீராவினையைத் தீர்த்தவனுந்
　　தீர்த்தனென்றுந் தீரத்தமிசைச்
சேயாய்வளர்ந்த செய்கையினாற்
　　சேயென்றொருநா மமுமபுனைந்த
பேரானந்தக் குகவேளைப்
　　பெற்றுதரித்த நற்றாயே
பேச்சும்பேச்சில் லாவிடமும்
　　பேசுமபொருளு மாமுதலே
வாரார்கண்ட னலலூரின்
　　மயிலேவருக வருகவே
மங்காதொளிரு மங்கயற்கண்
　　மணியேவருக வருகவே. (க)

தாயாள்வருக தாயர்புகழ்
　　சமர்த்திவருக சமாதிகட்குத்
தலைவிவருக தலைமாலை
　　தரித்தாள்வருக தரியலர்க்குத்
தீயாள்வருக தியனைய
　　திறலாள்வருக திறம்பாத
சீராள்வருக சீர்ப்பாடல்
　　செழித்தாள்வருக செழியனருள்
தூயாள்வருக தூயமலர்த்
　　தொடையாள்வருக தொடைசூழ்ம
துரைப்பெண்வருக துரைத்தனஞ்செய்
　　சுகமின்வருக சுகப்பவள

வாயாள்வருக கண்டனலனூர்
மயிலேவருக வருகவே
மங்காதொளிரு மஙகயா கண்
மணியேவருக வருகவே. (ம)

வருகைபபருவம் முற்றிற்று.

---

## அம்புலிப் பருவம்.

மநதாஞ்சூழலவெழு நிலைமைபெறுமகிமையால
வாரமௌன றுஙகூடலான
மாலையே துணையாப பொருநதலாறபொன் மாலை
மகிழுவரு ளுநதிறத்நாற
சந்தனபபொதியவரை நாடுளமகிழ்ச்சியாற்
சாபமேற குளுசெய்கையாற
சங்கபபெருமபுலவா கொணடாடவானிலஞ்
சாாநதுவள ருளுசிறபபா
லெந்தமானிடருமா னந்தமடையுமபடிக்
கிாங்கரத் தாறறமூவலா
விரவலரைமுகமலா வாககலாலமுதத்தை
யெற்குமேற படீஇதலா
லந்தமதுரைக்கிளியொ டிந்தவிதமேருவா
யமபுலீ யாடவாவே
யண்டகோடிகள்பரவு கண்டனூராரசியுட
னம்புலீ யாடவாவே. (க)

அருகினிற்சேர்ந்திருந் தாரைமகிழும்படிக்
காக்கிமன ராசியின்மே
லாகவிளையாட்டையுற் றப்பானவிடபமிசை
யமைதலாற் சிலையகத்தை

யுருகவைத்திடுதலாற் பாதியுருவாய்ந்தபொழு
தயர்சோதி யானவிறலா
லுத்தமத்தாசைமே விக்கண்டவரையெலா
மொளியினேர் பாலாக்கலாற்
கருதுநல்லார்க்கதிக சுகமுதவியேனையோர்
காமத்தை வீண்செய்யலாற்
கஞ்சத்தைமுகமலர் கவிழ்ந்திடப்புரிதலாற்
கந்தனை யடைந்திடுதலா
லரியனைச்செலவிமீ னம்பிகையைநிகருவா
யம்புலீ யாடவாவே
யண்டகோடிகள்பரவு கண்டனூராசியுட
னம்புலீ யாடவாவே. (௨)

கலைகுறைந்துடன்மெலியு மதியநீயிவளெலாக்
கலையுநிறை மதியளாவாள்
கணக்கனைப்பயனெனக் கொள்வைநீயிவளோ
கணக்கனை வணங்கவைப்பாள்
நிலையிலாதெங்கணுந் திரிவைநீயிவண்மோக்க
நிலையைபடி யார்க்களிப்பா
ணீள்சடைவயிற்புகுவை நீயிவடனன்பர்விழை
நெஞ்சிலுள சடைவைமாய்ப்பா
டுலையடைந்தாற்றாழ்வு பெறுவைநீயடியரைத்
துலையிலிவ ளுயர்வாக்குவாள்
சுந்தரமுகத்துமறு வுடையனீயிவளெங்கள்
சுந்தரர்க் கழகுசெய்வா
ளலையுறுத்தெள்ளமுத மிவளதிகமேவினைத்
தம்புலீ யாடவாவே
யண்டகோடிகள்பரவு கண்டனூராசியுட
னம்புலீ யாடவாவே.

ஈசன்முக்கண்களு ளிடக்கணுவாய்வளரு
    மிவளுமவ் வீசனுக்கே
யிடக்கணுவாளிதி னடைந்தோஞ்சமத்துவம
    தென்றுகரு வங்கொண்டிடாய்
நீசபரலோசனை கரத்தான்மனைநகதுன்
    னெஞ்சிலெள் ளளவுமிலையோ
நெற்றிக்கண்மணியையமமனைவளாத்தாளென்ற
    நினைவுமா சையுமலாதவ்
வாசையானின்பெயா தமைமுந தமதேரவிவண்மதலை
    யாகவே தங்கள்சொலவ
தல்லாமலும்புவன மெலலாமவிளங்கிவரு
    மதினுங் குறைந்துவிட்டா
யாசுமுதனற்கவிக ளருள்வதினுமேலிவளொ
    டம்புலீ யாடவாவே
யண்டகோடிகள்பரவு கண்டனூராசியுட
    னம்புலீ யாடவாவே. (௪)

முயலொடுமிடிக்குள்வைத் தழகுநீபார்க்கமறை
    முதல்வன் கரத்திலேந்தும
மூதணடமுகடும் வெடித் திடப்பேரொலி
    முழக்கிச்செழிக்குமானைக்
கயல்விழியினல்வெற்றி கொண்டுனக்கேதருவள்
    ககனமீன் பதியாதலாற்
கருத்துமொருகாற்றரணி மீனிடத்தடையுமேற்
    கைத்துவச மீனுமீவாள்
செயல்கொண்டலாக்குபே ரப்பெயர்நிலத்திடச்
    செல்வமள வற்றதருள்வாள்
திங்கடொறுமிரவிபை யடைந்துகுகுவாகுமச்
    செயலொழித் தொளிகொடுபபா
ளயன்மனைபுகுந்தவதி பாதகம்போக்குவா

ளமபுலி யாடவாவே
அண்டகோடிகள்பரவு கண்டனூராசியுட
னமபுலியாடவாவே. (௫)

பஞ்சணைபதாசநீ துயிலகொளப்பாற்கடற்
பாம்பெரும் பாயலான
பார்த்தனை புரசுருட் பாக்கவேபுலகெலாம்
பாலித்து மேன்மைபெற
கஞ்சாசியருண தனயனைக்கொருவார்த்தை
சடசாடை யாமெரிபாள்
கரியவனை பங்கீ கரித்துணைமைநாடாது
காய்ந்தவனை யடுக்கனனுந்தற்
பஞ்சவதனத்தரா லங்கமழிவு றுமென்
பாவையாக வீதயமேவப
பாவைஞ்செலுத்து மொரு பாவியையடுத்தபழி
பாதக மொழித்துவிடுவா
னஞ்சனநீட்டுங் கயற்கணுண்மகிமையோர்க்
தமபுலீ யாடவாவே
அண்டகோடிகள்பரவு கண்டனூராசியுட
னமபுலீ யாடவாவே. (௬)

பக்கடலிலுற்றநஞ் சோதரனெனத்தினம்
பாராட்டுமே வரிசையாலப்
ண்புபறறிகொடும் பாவிநஞ்சோதரம்
பற்றியது நின்னைவாட்டும்
பக்கழூலங்தெரிகி லார்கண்மறுவென்பர்நீ
வரவரத் தேய்ந்துவிட்டாய்
மாதேவனையுநஞ்சு கண்ட மட்டுந்தொடர
மனையாட்டி யாற்பிழைத்தா
னுயச்சடைக்கண்ணவன் முடித்ததிற்பயனுமிலை
யொளிகூடி வளரவேயவ்

வுத்தமிகடைக்கணமு தம்பெறுவையேயென்று
மோங்கிவிட நீங்கிவாழ்வா
யயத்தைநெஞ்சிற்கொளே லாண்டருள்வதுண்மையே
யம்புலீ யாடவாவே
யண்டகோடிகள்பரவு கணடனூரரசியுட
னம்புலீ யாடவாவே. (எ)

மானையும்வேலையும் வாட்கணையுமெங்கெங்கு
மாரன் திருச்சிலையினவாய்
வைத்துய்த்தபூங்கணையும் வண்டையுங்கொண்டுமண
மருவுகூந் தலையுமுன்பின்
ருனுகந்திடுதலான் முகமதியுமிருபுறந்
தாங்குங் களங்கமிந்தத்
தன்மையானுமுயர்ந் தேமென்னவுனதுசிந்
தையினினைந் தேதாமதித்
தேங்கழ்வையோதவைக ளங்கமலங்கின்னுறவு
மிகலுமா கியநீலநஞ்
சேற்றவரவாம்வரிற் சுகமுண்டுமாறிலிங்
கென்னுகு மோவுணர்விலா
யானிமுன்னடிரா சியினுறிற்பிரமருள்வ
ளம்புலீயாடவாவே
யண்டகோடிகள்பரவு கண்டனூரரசியுட
னம்புலீ யாடவாவே. (அ)

உன்னுமொருவேளையும் பன்னுமொருவேளையும்
முளைமுன்ன தானபின்மூன்
றுள்ளதுஞ்செயலழிந் துணர்வொடுங்கித்துயிலு
மொருவேளை யுந்துயின்ற
பின்னெழுந்திம்பரிற் பின்னுமெத்தொழிலிலும்
பின்னுமோவ் வொருவேளையும்

பேதைதம்மன றனைவலிய வந்தாண்டிகரிலாப்
பிரபுவா மொருவேளையுங்
கன்னாயப்க்குங்கரி முகத்தனையுமிவளருகு
காணவர்கண் மயிலினைக்குங்
கவினிமிகுக்கைக்கு நின்வடிவுபோதாத
கவளமா மிதைபறிந்திவ்
வன்னநடைபாலுறி லுயிர்ப்பயமுநீங்கிவிடு
மம்புலீ யாடவாவே
யண்டகோடிகள்பரவு கண்டனூரரசியுட
னம்புலீ யாடவாவே. (கூ)

பிரமகற்பந்தொறு மருந்தவமியற்றிநீ
பின்புவந் தாலுமிந்தப்
பெண்ணரசிசமூகங் கிடைக்குமோவளவிலாப்
பெருமைசேர்ந் தோளிராலவாய்த்
துணையினமகள்வலியவே நினையழைத்துங்கோடி
சுகிர்தமென் றெய்துறுமற்
றுன்மதியடைந்ததாற் றன்மனைக்கினியுனைத்
தோன்றுகிலே யாடியாக்கி
யிரசமில்லாமலே செய்வளிவளூர்ப்பெயர்க்
கிணையாக்கி யிருகோட்களுக்
கிணையிலாசீரக்கியோன் பதுகோளின்மூன்றெழித்
திம்பரிடை யாறுசெய்வா
ளரனிடப்பாகத்தி யெனவுணர்ந்திவளோடு
மம்புலீ யாடவாவே
யண்டகோடிகள்பரவு கண்டனூரரசியுட
னம்புலீ யாடவாவே (ய)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

## அம்மானைப் பருவம்.

சிருட்டி திதிசங்கார மெனனு முத் தொழிலுந
தெரிந்தவொரு பசிமையாளுந
தெய்வபதிமானிடரின மேம்பட டயாவருந
தெய்வங்க ளாகுமவெணைப்ப
பருத்திமுதலானாவ வகையான நூலாற
பானரிய புடைவையொத்தப்
படியில்லையோவனைவர்கள் போலுலகியாவுநம
பாலாகு மெனறுமெவா
கருத்தினிலகாதைகொள் ளாதவாருணங்களைக்
கைவசந் திறதிரட்டிக்
காட்டிமேலவிடுதலைபோற காஞ்சனககோதையவள்
கணவனொ டுளகசளிபபுற
றருத்தியரியிறபடி தாங்கணட னூரமமை
யம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குபூரணைதாமதி நுதலி
யம்மானை யாடியருளே. (4)

ஒருகான்மடக்கிமற் றொருகாலுமவ்வா
றுறப்பீத வுடையொடுகெகி
யொட்டியானத்தழகு மினனுமிண்டவளையா
துறச்சிறு சலாகைவிடல்போற
திருவுந்திமேலெழுந் தொழுகியவுரோமஞ்
சிறக்கச் சிறக்குமதனுச்
சியில்வட்டமாயெழுந் திகிரிபோற்கொங்கைக
டிரண்டகண் டனகர்ப்பனை
யருமையாமரகதப் பதுமைகுத்திரமதா
லங்கைமாத் திரமசைப்ப
தன்றிவேறவயவ மசைக்காதமர்ந்துவிளை
யாடுமெற் புதமதேபோ

ரியமார்கொழுமழுவை யாசாண்டபெண்ணரசி
யம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௭)

தன்னிடத்துண்டான நீர்த்நிபாகியசுதைக
டங்கட் கிரசியவைபங்
தன்னையுங்கீழ்மநீழ் வைபங்குழலைகையுமினிய
தாவுநவி யிஞ்சநகைகமைக்
கன்னியர்களொவ்வொருவர் களையுமேன்மேலதாய்க்
காணுமொவ் வொருவகினுங்
கனவிரைவிறெடுமேற்ற வவர்மாறிமாறியின்
கைகள்பா லுலகனைத்துந்
துன்றுமவைகளையிட் டகன்றிடேமெனவுரைசெய்
தோற்றமே போலநனம
துரையரசன்மகளான கண்டனூர்ச்செலவியதி
சுகமவுண ஞானமாலா
வன்னையெவ்வுயிர்கட்கு மின்னும்வெள்ளொளியமுத்
தம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௮)

இளந்தைவயதிற்புத்தி சாலியென்றுனையேயி
யாவர்களு மெச்சிநாவா
லெடுத்தெடுத்துப்பல தரம்புகழ்ந்தனரச்சொ
லிருசெவிக் குட்புகுந்தெம்
முளங்கொளாவானந்த முற்றுமொருகரிநாக்கு
முள்ளோ ரிருப்பரென்றே
யொருகோடிதெய்வத்தை வேண்டினேமுச்சந்தி
யுற்றமண் ணுங்கொணர்ந்தே

களங்கமறவேதலைச் சுற்றியுமெறிந்தனங்
கண்மணி யமமனைதனைக்
கனசபையினுடா திணக்கமாயாங்களுங்
காணவோ ரடியதாப்பூ
வளந்தமாறுணை பான கண்டனூர்வளர்செல்வி
யம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யமமானை யாடியருளே. (௪)

மாவிலிகுசந்தங்கள் வடிவாகமார்பினிடை
மருவிய குசங்களெங்கள்
மரபாங்குணத்தினு லென்றுகுதிகொண்டணுகி
வருவதைக் கைகளோர்ந்தித்
தேவிகுயகிகர்வையோ வெமபுளிப்பல்லாது
தித்திப் புமக்குமுண்டோ
சீயெனத்தள்ளிவிட மானமில்லாதவர்கள்
செய்கைபோன் மீண்டுமீணடுக
தாவிவருதன்மைநிக ராகவெழிலோவியந்
தரணிமீ துயிரினோடு
சார்ந்ததேபோலவ தரித்தசபராம்பிகைத்
தாய்கண்ட னகருள்யார்க்கு
மாவியாகியசெல்வி மஞ்சணிரமாளதிர
ளம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௫)

இருக்குமம்மிடமரிய பொருளதனையுட்பூட்டு
மிட்டதா லுலகினிடைமற்
றெவருமடையப்படா தன்னவர்சுழற்றுநா
வெனுமிக்க திறவுகோற்கு

பொருக்காலுமிசைவுறு தூரியபோர்க்குஞ்சாவி
யொடியாது துருவினுற்சிக்
குற்றிடாதுள்ளவொரு திறவுகோணமாட்டியே
யோயாத நேகநாளும்
பெருக்கசுழற்றினுட் பூட்டுந்திறக்குமது
பின்புகைக் கடைவதாகும்
பிரயாசமெனநவி லிருகையின்முடிமீதிற்
பிறங்குமொளி யெபழுத்த
வுருட்கணுபகிகயற் கணிகண்டனூரம்மை
யம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௬)

வெள்ளோதிமங்களா சாயவழிபாகவே
மேதினிக் கட்செழித்த
வெள்ளநீர்க்கஞ்சவா வியைநாடிவருமளவு
மின்கரிய வண்டினமடர்ந்
துள்ளவிகசிதநளின மோரிரண்டும்பரிடை
யுற்றவிது புதுமையென்றங்
குற்றபொழுதிவைகணந் நடையழகுகவரவிவ
ணுற்றவென் றுன்னியுடனே
தள்ளமீண்டங்குறத் தள்ளவிவ்விதமான
தன்மையைக் காட்டலேபோற்
றமிழ்மணங்குன்றாத கண்டனூர்க்கோயிலுட்
டங்கியர சாட்சிபுரியு
மள்ளற்செழும்பூவின் வளரோதிமந்தந்த
வம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௭)

களங்கமறவேதலைச் சுற்றியுமெறிந்தனங்
கண்மணி யம்மனைதனைக்
கனசபையினூடா திணக்கமாயாங்களுங்
காணவோ ரடியதாப்பூ
வளந்தமாறனைபான கண்டனூர்வளர்செல்வி
யம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௪)

மாவிலிருசந்தங்கள் வடிவாகமார்பினிடை
மருவிய குசங்களெங்கள்
மரபாங்குணத்தின லென்றுகுதிகொண்டனூகி
வருவதைக் கைகளோர்ந்தித்
தேவிகுயசிகர்வையோ வெமபுளிப்பல்லாது
தித்திப் புமக்குமுண்டோ
சியெனத்தள்ளிவிட மானமில்லாதவர்கள்
செய்கைபோன் மீண்டுமீண்டுந்
தாவிவருதன்மைசிக ராகவெழிலோவியந்
தரணிமீ துயிரினோடு
சார்ந்ததேபோலவ தரித்தசபராம்பிகைத்
தாய்கண்ட னகருள்யார்க்கு
மாவியாகியசெல்வி மஞ்சணிரமானதிர
ளம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௫)

இருக்குமம்பிடமரிய பொருளதனையுட்பூட்டு
மிட்டதா னுலகினிடைமற்
றெவருமடையப்படா தன்னவர்சுழற்றுமா
வெனுமிக்க திறவுகோற்கு

பொருக்காலுமிசைவுறு தூரியபேர்க்குஞ்சாவி
யொடியாது தருவிறற்சிக்
குன்றிடா துள்ளமொரு திறவுகோனமாட்டியே
யோயாது தமேகநாளும்
பெருக்கச்சுழற்றினுட் பூட்டுந்திறக்குமது
பின்புகைக் கடைவதாகும்
பிரயாசமெனநவி லிருங்கின்முடிமீதிற்
பிறங்குமொளி யெபாழுத்த
வுருட்கஞுபகியற் கணிகண்டனூரம்மை
யம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௬)

வெள்ளோதிடங்களா சாயவழியாகவே
மேதினிக் கட்செழித்த
வெள்ளநீர்க்கஞ்சவா வியைநாடிவருமளவு
மின்கரிய வண்டினமடர்ந்
துள்ளவிகசிதநளின மோரிரண்டும்பரிடை
யுற்றவிது புதுமையென்றங்
குற்றபொழுதிவைகணந் நடையழகுகவரவிவ
ணுற்றவென் றுன்னியுடனே
தள்ளமீண்டங்குறத் தள்ளவிவ்விதமான
தன்மையைக் காட்டலேபோற்
றமிழ்மணங்குன்றாத கண்டனூர்க்கோயிலுட்
டங்கியர சாட்சிபுரியு
மள்ளற்செழும்பூவின் வளரோதிமந்தந்த
வம்மானை யாடியருளே
யந்திவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௭)

தன்பரம்பரையிலெம் மன்னவர்களிரவிமண்
டலமார்க்க மார்சுவர்க்கந்
தங்கினர்களோவவாக டங்கட்குமங்கைக்
தலத்துநெல விக்ரனியெனக்
துணையமைதமனனுயிர் பொருந்துமதவரவர்க
டோன்றுமவ னங்களுக்காந்
தொழிலினையுள்ளவாகி லுயபிறழ்தன்மருவாது
தூயசெங் கோனடாத்தி
யின்பமூட்டிக்கதியி லேறுமொவ்வொருவர்க்கு
மிதுபிணைட மாதுமென்ன
வெடுக்கெடுத்தெறிதலேபோன மீனநாட் டிறமுறை
யிட்டமறை பெட்டிடாதிங்
கன்பருகவெகளிதூகிட் டியாகண்டனாரம்மை
யம்மானை பாடியருளி
யந்திவானுலவிய சூழுந்தைமாய திருநவி
யம்மானை யாடியருளே. (௮)

நீடித்தநாட்களாய்த் தலைகீழதாய்த் தருவி
னிபிடமா கியவூசிபோ
னீண்டமுண்மத்தியிற் றவமியற்றியுமிலைக
ணிமலனை யடைந்ததல்லால்
வாடித்தவித்ததே பலனுமடைந்தவன்
மனைவியா லாஞ்சுவர்க்கம்
மருவப்புகுந்திடிற் றடைகளொன்றலவடைய
வாய்த்திடா வான்சுவர்க்க
நாடிக்கிளம்பியது நயமிஃதுநயமென்ன
நம்புத லிலாதுபல்கா
னற்கூவிளங்கனி யடிக்கடிதிரும்பல்போ
னலமிலகு கண்டனகர்வா

பூரணச் செம்பொன்மணி மெழுக்கையாப்பச்சை
யம்மானை யாடியருளே
பங்கிவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௯)

தச்சணிந்திரண்மருவு மாகருமனந்தவந்
தணைந்தகோவாய் மொழியாந்திருமேனுந்
தவளமுழங்குமுடைய பங்கயம்பதகளி
தபங்கரபவனமுறு
யிரதைகபுடன்பாடிபாமாய்ந்தணிந்தனி
மெனமின்னுமெய்ப்பருகுதேர்ப்ந
சிட்டதுணையாம பொன்மாமலைப்பச்சையா
யிலைவயளம் பெருதுகர்ந்த
மையதிருநடம்பார் மெய்நிக்குறிபிடனென்
மாபூதிரு ளவதுயாமுற
மைப்பமைட்டாது முவனமுங்காணவே
வளர்திருதரையாளமு
பச்சமடியார்க்கருந் தருள்கண்டனாதர்மை
யம்மானை யாடியருளே
பங்கிவானுலவிய குழந்தைமாமதிநுதலி
யம்மானை யாடியருளே. (௰)

அம்மானைப்பருவம் முற்றிற்று.

---

## நீராடற் பருவம்.

செம்மையாய்ப்படர்பசுங் கொடிகளொடுகொடியதாந்
தீவினை யுபிர்க்குறுந்தா
தீர்க்கும்வல்லமையெனக் கேயலான் மற்றுள்ள
தீர்த்தமடை யாதுநீவிர்

வம்மினென மொழிவபோற் கூச்சலிட்டோடி வரும்
    வைகையி லநேகநாட்செய்
மாதவத்தாலேலனை மாதாளகத்துவமை
    வாயந்தகோ ணீங்கிமேலா
மம்மையளகத்துவமை யாய்மெய்க்குழுவமையா
    யவளோடு கலந்தநேநன்
காமெனச்சைவல மிறைஞ்சல்போலடியிணை
    யடைந்துநீங் காதுவளைய
வெம்மையுந்தண்மையு மளாயமுத்தனவல்லி
    வெள்ளநீ ராடியருளே
விபுதரானிறைகண்ட னகரிலவாழ்வுயர்மங்கை
    வெள்ளநீ ராடியருளே. (க)

தண்டரளமளவற்ற தயனருளைவேண்டிநித்
    தழுமவன் வசிபபதான
சலசமனையுட்புகுந் தோயாதுகொட்டினேஞ்
    சங்கமா கத்திரண்டங்
கண்டியிரவும்பகலும் வாய்விட்டுமலறினே
    மவனேறு மன்னமேன் முத்
தள்ளியிட்டோமிவ் வணஞ்செய்துமவனைத்
    தருண்மாதர் கண்டநிகரா
வுண்டாக்கினனன்றி வேறில்லைநவமணிக்
    கொளியீந்து குயிலினொலிவாய்ந்
துள்ளகயல்விழிகழுத் துவமையாவோமென்ன
    வொருகோடி சங்குசூழ
வெண்டிரைசுருட்டும்வை யைத்துறையினிறைசெல்வி
    வெள்ளநீ ராடியருளே
விபுதரானிறைகண்ட னகரில்வாழ்வுயர்மங்கை
    வெள்ளநீ ராடியருளே. (உ)

இன்னுயிர்ச்சகிபாத ரளவற்றபேர்களொடு
        மெலினடை கண்டுதொடர
வெழிலிலகுமோவியமுயிர்பெற்றுவீதியிடை
        யெழுவபோன் மெலநடநது
பொன்னுலகினமாரபொழி பூமழைகண்மறுகெலாம
        பூமெத்தை யபாமினிதாப
போதுபாடி தருபள வெழுமபரிமளங்களாற்
        புலயுமே கிடபுணரிகா
தன்னுருவகினராக மணமேவளாயகிபர்
        தயரினமண வதிகாளெனத்
தன்பெருமைமேவசவரு கூறிச்செழித்துத்
        தழைக்கிடக் கொடிமினென்ன
மின்னுநுண்ணிடையுடைய மீனாட்டத்திரு
        வெள்ளநீராடியருளே
விபுதரானிறைகண்ட னகரிலவாழ்வுயர்மங்கை
        வெள்ளநீராடியருளே. (௯)

வாளையெல்லாநதங்க ளினமெனச்சேர்க்கையாய்
        வந்துசூழ்ந் திடவிமைப்பும்
மைக்குறியுமோாநதுநம மினமல்லவென் றுபய
        மத்தியிற் பயமடைந்து
நீளமாய்ப்படர்கொடிச் சைவலத்துட்புக
        நிறைந்ததன் டலையின்மலர்வாய்
நின்றெழுகுமினியபிர சத்தைக்குடித்தவெறி
        நீங்கிநீங் காதிருப்பத்
தாளதாமரைநாடி வருமளிதமினமெனச்
        சார்ந்திடச் சிறகுறுத்
தன்மைகண்டினமல்ல வென்றளகமலருறிஇத்
        தங்காதொரீஇப் போதும்பர்

நீளவிழிமலர்காட்டி வையையிற்றெய்வமின்
வெள்ளநீ ராடியருளே
விபுதராணிறைகண்ட னகரில்வாழ் வுயர்மங்கை
வெள்ளநீ ராடியருளே. (௪)

வீறுணசிங்கவெங் குருளைகளேதகட்வாய்
விட்டலற மிளிருமுடனீள்
வெம்பணிகயிற்றுற் பிணிப்பபோலவைகளுடன்
மேவிச் சுருணைடுசெலலச்
சிறும்பப்பணிகளிற பிசைாட்டையடிகள்போற்
திமிருள்ள வாளிறுலே
சேடித்ததுட்டமிரு கங்களை படித்துநீர்
செல்லுமென முடனேகிடக்
கூறுவைத்திடுமணற் குவியற்றனங்களைக்
குலவிய திரைக்கைகளாற்
கோணடாசனுங்கடற் பாற்செலுஞ்செவகர்
குழாமென வதிர்த்துப்பலபோன்
மீறிவருமவையைமா நதியில்வளையரசன்மணி
வெள்ளநீ ராடியருளே
விபுதராணிறைகண்ட னகரில்வாழ்வுயர்மங்கை
வெள்ளநீ ராடியருளே. (௫)

ஓரிடத்துற்பவ மியைர்ததாளுமன்பி
னுறைமதுரை யூரைநாடி
யோடிவருநீதியா னமதருமைமைந்தனை
யுவந்துதாங் குஞ்செய்கையாற்
பாரிடந்தன்னிலினி மாற்றவளெனும்பெரிய
பகையினைப் பாராட்டனற்
பாங்கல்லவென்றுளக் கனிவொடுகலத்தல்போற்
பச்சைவேயனையதோளிற்

ருரிருந்தாரொடுந் தண்டாளமாலையுந்
தாங்கியிப் புவியையாளத்
தனுவையுந் தாங்கிய துரைச்சிம்மனறுதுவ
சந்திமானன் குடிக்கோர்
வேரானமுளைத்தம்பண கொடிவையைமாநதியில்
வெள்ளீராடியருளே
விபுதராணிறைநகண்ட னகரில்வாழ்வுயர்மங்கை
வெள்ளீராடியருளே. (௬)

உலகத்திலுள்ளதான சிவகோடிகளெலா
முள்ளும புறம்புமவரு
முட்கச்செயுமபாப வாக்கங்கள்யாவையு
மொழித்திடுஞ் செய்கையான
பலமெலாங்குறைவடைந் தனவவைவிருத்தியாய்ப்
படர்தரக் குடமூன் றுடைய
பச்சைக்குருங்கொடி நமைக்கலந்திடவரும
பாக்கியமிதாகுமென்னை
நிலமேற்கிழித்தொழுகும வேகவதிதிரைகளனு
நீண்டபல கைகளாலு
நிகழ்செய்பாணிலங்க ளொனும்விளக்கேந்தியெதிர்
நின்றிடுந் தன்மைகாட்ட
விலையிலாமாணிக்க மணியமதுரைத்தலைவி
வெள்ளீராடியருளே
விபுதரானிறைநகண்ட னகரில்வாழ்வுயர்மங்கை
வெள்ளீராடியருளே. (௭)

பாணிறமடைந்சொரா யிரமுகத்தோடுமேறு
பதினு யிரம்வீரரைப்
பாதலத்திடைநின் று மேலாஞ்சுவர்க்கப்
பதிக்குமப் பாலராக்கிப்

பேனமொடுபொங்குநதி யாதோவதானதிப்
பிரபஞ்ச வாழ்வைநம்பும்
பேடிலாச்சீவர்களி னூழ்வினையினாலாம்
பிறப்பிறப் பினைமர்தயாய்த்
தானிவர்த்திப்பதான் மந்தாகினிப்பெயர்
தரித்தததி வினைவினீக்குந்
தன்மையால்வேகவதி யானேமெனப்பெருமை
சாற்றும்வை யைத்துறையின்வாய்
மேனிகனிபச்சென்ன மின்னுமெழில்மஞ்ஞைநீ
வெள்ளநீ ராடியருளே
விபுதரானிறைகண்ட னகரில்வாழ்வுயர்மங்கை
வெள்ளநீ ராடியருளே. (௯)

ஆகவத்தெதிரொதி ரதிர்த்ததிர்த்தமர்புரியு
மரசர்வீ ரச்சுவர்க்க
மடைதொறுமுடற்கூன மடைபவன்யாவனே
வவனுயி ரங்கரத்தான்
மோகமுற்றுத்தழுவ முகமலர்ந்தாயந்த
முறைமைபோ லுடலிலாற்கே
முன்னேவுமாயின யிவைகளாற்பாரினுனை
முட்டா ளெனப்புகன்றார்
நீகயற்கட்டேவி முககமலநிகர்வையோ
நீங்கெனத் துறையினளின
நிரைகளைக்கைகளாற் சேடியரொதுக்கவே
நிருமல நிறைந்ததெய்வ
வேகவதியிற்படிந் தொளிருமரகதவல்லி
வெள்ளநீ ராடியருளே
விபுதரானிறைகண்ட னகரில்வாழ்வுயர்மங்கை
வெள்ளநீ ராடியருளே. (௧௦)

வண்டோவிடுங்கமல மலர்வாய்விரிந்திரு
மருங்கினும வரிசையாக
மின்னிமதுகரமுண்மது வழிதருகருங்குவளை
மலரொடு வதிந்தகோற்றங்
குண்டோதரனபொருட் டணிமாலையாயசைவு
கொண்டுநுரை கொண்டடங்காக்
குமிழியொடுபெருகிவரு வையைமின்வையமேற்
குலவுமுயிர் வினையையெல்லாங்
கண்டோட்டுமெனெனக் கண்ணீர்பெருக்கியுட்
கனிவா யழைக்குநீர்மை
காட்டுமக்கடவுண்மா நதிதனிற்சகிமாதர்
கையேந்த நடைபயுகுமான்
வெண்டோட்டுநளினத்தி செய்யநளினத்திதொழ
வெள்ளநீ ராடியருளே
விபுதராஜனிறைகண்ட னகரில்வாழ்வுயர்மங்கை
வெள்ளநீ ராடியருளே. (ய)

நீராடற்பருவம் முற்றிற்று.

---

## ஊசற்பருவம்.

சுத்தவெண்மயமான வகலநீளமுமுள்ள
தூயவயி ரப்பலகையாந்
தூங்குமஞ்சத்துநடு விற்பொங்குமெண்டிருத்
தோழியர்க ளொடுமமர்ந்து
சித்தமுண்மகிழ்ந்தாடு தோற்றமெய்முழுமையு
நிறைந்ததா மரைகள்பூத்து
நெடுமாலெழிற்பெண்டி ரொடுநடுவுறத்தங்கி
நித்தில மிகக்கொழித்துத்
தத்துமொள்ளலையுடைய பாற்கடலமர்ந்தாடு
தன்மையை விளாந்துகாட்டத்

தமிழ்நாடுதழையத் தழைந்தபூங்கொடிதள
 தளத்தமங் களசரீரி
புத்தமுதமலரய னமைத்திடாவோவியம்
 பொன்னூச லாடியருளே
பொழில்கொள்கண்டனகரமர் செழியனன்புளபுதல்வி
 பொன்னூச லாடியருளே. (௧)

மற்றெங்குதலைவிரித் தெங்கெங்குநீண்டகனு
 மறுகிடை யிரண்டுபுறமும்
வரிசையிற்சேர்ந்துவா னத்தளாவிப்பானு
 மண்டலத் தைக்கடக்கப்
பெற்றமேறும்பரன கோயிலைவழக்கமாய்ப்
 பிரதக் கணம்புரிதலைப்
பெற்றிலாமையினத் தருக்களினிடைப்புகப்
 பெற்றுவழி விலகியப்பாற்
சுற்றியத்தமனவளை யடைதலாற்றடைநேர்ந்து
 சூரியன் கதிபின்னிடச்
சோதிடம்வழூஉப்படச் செய்யுமதனைக்கொரு
 துணைச்சியென் னிதையமதையும
பொற்றங்குபீடமா யங்கீகரித்தபெண
 பொன்னூச லாடியருளே
பொழில்கொள்கண்டனகரமர் செழியனன்புளபுதல்வி
 பொன்னூச லாடியருளே. (௨)

வெண்ணிலாக்கற்றைபோ னூலூசலாகவே
 மின்னுமொண் டரளவடமேல்
விட்டெறிக்குங்கிரண பந்தியுமசைந்துமேன்
 மேலதாய் மிளிர்தலுஞ்சேற்
கண்ணிலாவியமணியி னொழுமொளியுமதனொடு
 கலந்துவீ சுதலுமண்டக்

கங்கையியமுனையொடு தழீஇக்கொண்டடுக்கடுக்
காகத் திரைக்கரத்தா
னண்ணிமேற்பொங்கிவரு மெழில்காட்டவழிகாட்டி
நம்புமடி யவர்குழாத்தை
நாடொறும்பெரியவீ டேற்றுமேற்றரன்வரவு
நாடித் தவம்புரிந்த
புண்ணியசொரூபிவிளை யாடுங்கலாபியுயர்
பொன்னூச லாடியருளே
பொழில்கொள்கண்டனகரமர் செழியனன்புளபுதல்வி
பொன்னூச லாடியருளே. (௯)

குங்குமச்செஞ்சந் தனக்குழம்பப்பிக்
குவிந்ததன மூன்றுமுச்ச
கோரங்களாகவே பாய்ந்துபாய்ந்தெப்பொழுது
கொள்ளுவோஞ் சுந்தரன்முகத்
திங்களின்செழியகிர ணங்களையெனத்தினந்
தேடியங் கிங்குமாகத்
திரிதல்போற்றோற்றக் கரும்புருவவில்விற்
செறித்தவிரு கட்பகழிக
ளங்குமிங்கும்பாய்ந்து பாய்ந்தருட்சுந்தர
னகப்படிற் றெரியலாகம்
மாற்றலென்றுனையாடல் போற்றோற்றநங்குடி
கபிவிர்த்தி யானவாழ்வு
பொங்கியதெனக்காஞ்ச னச்செல்விமகிழுமின்
பொன்னூச லாடியருளே
பொழில்கொள்கண்டனகரமர் செழியனன்புளபுதல்வி
பொன்னூச லாடியருளே. (௪)

மெய்தருமமென்னும்வித் துருமச்செழுங்கால்கள்
வீழ்ச்சிகொள் ளாதுநாட்டி

 கண்டனூர் மீனாக்ஷியம்மை.

[illegible] ஆவபிரதவினைமை
[illegible] மணி
மெய்யதடங்குயிலம் முழக்கென முழக்கங்கொண்ட
பீடுடைய நான்மறைச்சிலம்பும்
பேதித்திடப்பட்டாக சட்டாமணிமுத்தார
பிறங்கிய வடங்களபூட்டி
யுய்த்தாக்குயிர்க்குழா நேரிபானையமைமுடி
வெணுஞ்சேம மணிப்பலகையின்
ஞெளிருவாமதிபோ லமாந்துசெடிபமொல
முடுவெள வளைந்துகொள்ள
பொய்யதழூவுநிடைப பொன்பாலைகொஞ்சுகிளி
பொன்னூசலாடியருளே
பொழில்கொள்கண்டனகரா செழியமாடபுள்பூத்தலைவி
பொன்னூசலாடியருளே (௫)

காராடுகூந்தலென்னு நீருண்டமேகங்
கலந்தெலாக கலைபுமேவிக
கண்ணிணையெனுமபிணைகள் கூடிப்பொனாட்டேனாறு
கலகமிட் டபூகுமெய்யிற்
சீராய்த்துளும்புபச் சொளியினைத்தெளிவாய்ச
செழித்தபுல லெனவிருமபித்
திரும்பித்திருமபியுண வெழுதலபோனுடித்
திகைத்துறையும வதனமதிய
நேராயசைந்தாட வளைவானபிறைபோன்ற
நெற்றியி லணிந்தபொட்டின
னிகழுமொளியுஞ்செவியி னின்றாசலாடுமணி
நீளொளியு மொன்றுகூடிப்
போராடவாராடு தனமசையமீனவிழி
பொன்னூசலாடியருளே

பொழில்கொள்கண்டனகரமர் செழியனன்புள்புதல்வி
பொன்னூசலாடியருளே. (௬)

ஒள்ளொளிபடிகமணிப் பலகைமிசைவீற்றிருந்
துப்பசா ருறும்புலிசனி
ஒழுகுந்தழக்கழப்பாடி மின்வதாகியசெய்கை
புனைமனைந் தெய்ப்பிகணவன
பள்ளிகொள்நெம்பயோ ததியைவிட்டுலகிடைப்
பலதாய சனித்தனிதப்
படிபெனக்காட்டிச் சனித்ததிலையில்லாத
பதுமைபதிகா வாமெனுமிகத்
துள்ளாதடீயெனத் தள்ளிவிடல்போலுமெய்த்
தோற்றந்தெரியாதேபோற்
றேமைகயர்க்கழுகிடுந் தோகைவந்தோகையைத்
துதிசெயடியேற்களித்த
பொள்ளாதமணியாடிய ருள்ளூறியெழுமமுது
பொன்னூசலாடியருளே
பொழிலகொள்கண்டனகரமர் செழியனன்புளபுதல்வி
பொன்னூசலாடியருளே. (௭)

வஞ்சமேயானபிர பஞ்சவாழ்க்கையையன்றி
மற்றொன்று நிலையிலைத்தீ
மறலியிலைபாபபுண் ணியமிலைநரகமெனும்
வசனமேயிலைமடவார்க்
கொஞ்சிவிளையாடலே மோக்கமென் றுட்கொண்ட
கொடுமூடர் காணமையுட்
கொண்டுதுதிசெய்விரோனை முன்னேறுவீரிதைக்
கொஞ்சமுங் கொள்கிலீரோ
லுஞ்சிடாதுடனே திரும்பிவருவீரென்
றுணர்த்திடுந் தோற்றமேபோ

னுலகெலா முய்ந்திட வரைக்கோன் குலத்துவந்
துதயமா கியபிராட்டி
புஞ்சிகத் தலையனைய சகிமாரசைத் திடப்
பொன்னூச லாடியருளே
பொழில்கொள்கண்ட கனரமர் செழியனன்புளபுதல்வி
பொன்னூச லாடியருளே. (அ)

மாப்பவளமேனிபோற் சேப்படையுமிதழ்செறிதல்
வன்னிமூன் றுஞ்சுடர்ச்சு
வாலைவிட் டெழுதலைப் போலுநடுவட்கிண்டும்
வண்டுக ளடர்ந்தெழுதலத்
தீப்படும்புகைபோலு மேவுசெங்களினச்
சிறந்தவில் விற்றிகழ்ந்த
செய்யவளுமச்சிவப் பொழியமற்றவையெலாஞ்
சேர்ந்தவச் சாதிமலருட்
காப்பமரும்வாணியுஞ் சுகவிந்திராணியுங்
கருதிவட மூன்றையுந்தங்
காணியாக்கொண்டசைப் பப்புவிமிசைஞெருவடங்
கைப்படா மையினழுங்கப்
பூப்பகழிவேட்கீந்த தமிழ்நாடுடைச்செலவி
பொன்னூச லாடியருளே
பொழில்கொள்கண்டனகரமர் செழியனன்புளபுதல்வி
பொன்னூச லாடியருளே. (௯)

என்றுயிரங்கரங் களைநீட்டிநாவிரண்
டிணையாசை மாதர்கூந்த
லெனுமிருளையெட்டிப் பிடிக்கவெதிலுதயமா
யெதையடைவ னேவவைவயின்
னன்றுவளைந்தகோ தண்டமெனமின்னனூர்
நறியநுத லென்னவிண்மே

னணனுடமன்றும்பிறையி னுருவமெனநண்பறு
நங்     மார் விசையினுட்டச்
சென்றுசேனை றதிவிளைவில வருதலாலுண்டான
சிரவளை விசைந்துகாட்டச்
செட்டியாய்க்கூடலிற் சென்றுவளைவிற்றவன்
றேவிசிந் திக்குமடியார்
பொன்றுதிருக்கவர நலகுங்கயற்கண்ணி
பொன்னூச லாடியருளே
பொழிலகொள்கண்டனகரமர் செழியனன்புளபுதல்வி
பொன்னூச லாடியருளே. (௰)

ஊசற்பருவம் முற்றிற்று.

---

ஆ. பருவம் பத்துக்குத் திருவிருத்தம் ௱௨.

கண்டனூர் மீனாக்ஷியம்மை

## பிள்ளைத்தமிழ்

முற்றிற்று.

உ

சிவமயம்

# கண்டனூர்,

# சுந்தரேசர் பதிகம்.

## காப்பு.

வெண்பா,

கண்டனூர் வாழுமுமா காந்தனடி யார்க்குவருங்
குண்டனூ றிப்பல்லூழ் கண்டிடுமோர்—கண்டனல்லூழ்
காணவருள் செய்சொக் கலிங்கப் பதிகமுளங்
காணவைக்குந் தந்திகமுற் கால்.

## சுந்தரேசர் பதிகம்.

ஓகையாயில்வாழ்வை நிலையாகவேயெண்ணி
யொருகோடி பாபங்களை
யுண்ணுமமுதினுமினிமை யாகவங்கைக்கொண்
டுலாவியமனுள்வருங்காற்
கூகையையிராவினிற் கண்டிடுங்காக்கைபோற்
கொக்குக் குழாங்களெல்லாங்
கொடியராசாளியைக் காண்டல்போற்பேசுநாக்
குளறிமெய் நடுநடுங்கி
மூகையாகியதருணம் வலியவந்தாட்கொள்ள
முன்னு விடிற்கருணைமா
மூர்த்தியெனுமுயர்பெயர்க் கீனமாமெஞ்ஞான்று
மூவாத ஞானமணியே
தோகைமயில்சிறைவிரித் தாடுஞ்செழும்பொங்கர்
சூழ்கண்ட னகரின்வாசா

சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே. (க)

அனுகூலமாகிய களத்திரமுநீடாயு
ளமைவதா மருமைமகவு
மானுதுநீதிவழி யார்ச்சித்தசெல்வமும்
மடையலர் புகாதவரனுன்
மினுமாடவீடுகளு நமதலலவென்றவைகள்
விதிவலியி னுற்றவெனவுண
மேவியும்மேவாம லுங்கழற்சிக்காய்கள்
வெணணீற் றடைந்தசெயலபோற்
றனுகரணமசைவுறு தொருவழிப்பட்டசற்
சனர்கூடு நிலையிலயானுந்
தங்கிச்சுகானுபவ மருவவோரறிவினைத்
தருவதெக் காலமய்யா
சொனவருஷநாற்கவிக் கருளும்வணிகோத்தமர்கள்
சூழ்கண்ட னகரின்வாசா
சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே. (உ)

பற்பலகவிச்செழு மலர்த்தொடைதொடுத்தருள்
பழுத்தமுது சொற்புலவராற்
பத்தியொடுநின்றிரு வரைப்புயகிரம்பப்
பரப்பிய துணர்ந்துமென்பா
வற்பழுமதித்திடா யென்றறிந்துஞ்சொலற்
காதார மெதுகொண்டெனி
லற்பமதிநம்மிரு வருக்குமேற்பட்டதா
லானேஞ் சமத்துவமென

நற்பகலுமிரவுந் துணிந்துரைத்தேனன்
னறுந்தொடையன் மீதுபுனைவாய்
நங்கையர்க்கரசியென் னங்கயற்கண்ணியென்
றுனும பசுங்கிளிக்குச்
சொற்பயிற்றுந் துரைப் பெணமணுளாகவினர்
சூழ்கண்ட னகரின்வாசா
சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே. (ங)

கயலாகிவட்டவடி வாயிலகுமாமையாய்க்
ககனமுக டுங்கிழிபடக்
கத்தித்தடித்தவுரு வத்தைநப்படைத்தரூ
கரமாகி நரசிங்கமா
யயமேற்கவந்தவா மனமாயிராமன்மூன்
றுய்க்கண்ண னய்ப்பரியுமா
யவனியின்சுமைதீர்த்த மூர்த்திமுன்னொருநாளி
லவைகளுரு வல்லாமலும
வயமேவுவிடையுரு வெடுத்துச்சுமக்குநின்
மலரடியென் முடிசுமக்க
வைத்திடுஞ்சுபமுகூர்த் தத்தையுண்ணுடினேன்
வரதொடியி லருள்செய்துரையே
சுயமானசோதியே யயனாதியோர்வலஞ்
சூழ்கண்ட னகரின்வாசா
சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே. (ச)

எட்டாதவெட்டவெளி யைக்குத்தியிருகர
மிளைப்பவர்கள் செய்கைபோலே

யேதேனுமொருசுகமு மில்லாதவிவ்வாழ்வி
லெப்பொழுது மிடைவிடாதுட்
பட்டாசையாலனு பவித்தனுபவித்துப்
பவக்கடலி லாழ்ந்துழப்ப
பட்டதல்லாமலொரு பலனையும்பெற்றிலாப்
பாவியே னுய்யவினருட்
கட்டாயமாகநீ வந்திடாயேனாமாதுர்
கமனிக்கு மோக்ஷமீந்த
கதைபொய்யதாமதைக் கருதிபாவேறலாது
காத்தருள்செய் குருமூர்த்தமே
சுட்டாவிமதனழிய விட்டவா சிட்டராற்
றுதிகண்ட னகரின்வாசா
சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே (௫)

எத்தேசகாலமு முனக்கேவல்செயுமடிய
ரிருசரண மலரைமுடிமீ
தேற்றித்துதிக்கா னில்லையோநின்னருட்
கிடமாகி யிடதுபாங்கர்
முத்தாவிழைத்தபணி மொய்த்தமரதகவலி
மோகஞ் செழித்துமருவ
மூவாதிருக்குமெழி லாலயத்துட்சென்று
முறையிட் டிறைஞ்சவிலையோ
மத்தாடுதயிர்போல மனமுடைதனீதியோ
மார்க்கத்தின் முட்போட்டதோ
மறலியையுதைத்ததாண் முடமாச்சுதோவென்முன்
வந்திடா வகைசொல்லய்யா

சத்தநிஷ்களமான தெய்வமேகிதிமான்கள்
ஆறுமுகனுட னகரின்வாசா
சொர்க்கலிங்கபத்தனை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே (௬)

தரணிதராறுதலை சமபோலுநிறையுவாச்
சந்திரனை யாணைகுருத
தண்ணெழிலிதழ கருங் குவளைபோலும்பயோ
தரமுகவு மாரிகாறு
வராமருவுமணிபிழ்ந் தோங்கிக்கதிர்ப்பருவ
முன்னாகுண சாலிபோலு
முனாதுதிருமுகசேவை காணுமணுயினே
னுள்ளாக தடம்பொருந்தா
மனையிலத்தண்ணீர துமடுவதுபோலவொரு
மாதகீயரில வாமனைந்து
வாடுவதுகாமமே விளிமேயனுமாவதுன்
வகனேதரிசனமுதவுவாய்
சுரபதியுமமாருஞ் சூழவந்தனுதினந்
அதிகனுட னகரின்வாசா
சொர்க்கலிங்கபத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே. (௭)

பஞ்செனவுமஞ்செனவு மடியையளகத்தினைப்
பலகா லெடுத்தெடுத்துப்
பன்னியப்பாவையன் னார்மயற்கடலுட்
படிந்துகணா யேறலின்றிக்
கொஞ்சமேனும்படிப் பின்றியேமட்டிக்
குரக்குருவ மானமூடர்

கூட்டுறவகற்றிசிற் காட்டுமெறிவாளரைக்
 கூடுமோ ரறிவுமீகை
நெஞ்சமுமபொறுமையு நிகழ்ந்ததீர்க்காயுளு
 நிறைந்தசந் தானநிதியு
நீதித்துரைத்தனமு மாதரவினுதவினு
 னீதயா நிதியாகுமே
துஞ்சுதலிலாதுநெற் பயிர்மழையினுற்பலன்
 றோய்கண்ட னகரின்வாசா
சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
 சொக்கலிங்கக் கடவுளே. (அ)

காமக்குரோதமுத லானவெம்புலிகள்வாய்க்
 கவ்விப் பிடித்திழுக்கக்
காதன்மனைமக்களெனு மாதரவிலாக்கொடுங்
 காட்டுளொரு கதியுமின்றி
நோமெழிற்கலைமானை நிகரமலைவாகியே
 நொந்துகலை மானியானுந்
நுண்ணறிவிலாதுதடு மாறினேன்மெய்ஞ்ஞான
 நூற்கவச மீந்துகாப்பாய்
தேமருவுமிதழிதழி மாலையாய்மாலயன்
 றேடொணு வன்னிமலையாய்த்
தேவர்துயரங்களைத் தீர்த்ததினுமெனதுதுயர்
 தீர்த்திட லுனக்குமலையா
தோஷமிலாவேள்வியின் றாமமேற்சென்றுமுகி
 றோய்கண்ட னகரின்வாசா
சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
 கடவுளே. (கூ)

கலையொலிமருங்கலையுடு மேகலையினொலியொடு
கலந்துகல கலவென்றிடக்
கனமண்டிபோட்டுடல் குலுக்கிகிமிராவாய்ந்திகல
கடந்தபெண சிங்கமெனனப்
பலகையினமர்ந்துநான் முகனுந்திடுக்கிடும்
படியாய்ப் படிக்குளோாகார
பதிபொருட்டரியபிர சங்கம்புரிந்தசெம
பவளவா யனனமனவெண்
சலசைசெஞ்சலசைசஞ் சலமொழிவுறச்செழுஞ்
சாமரை புறத்திரட்டத்
தனியரசுபுரியுமீ னம்பிகைமணாளனே
தண்ணளியென் மீதுபுரிவாய்
சொலவாதிசேடனுக் குமமுற்றுருப்பெருமை
துறுகண்ட னகரின்வாசா
சொர்க்கவின்பத்தினை வெறுக்குமன்பர்க்கருள்செய்
சொக்கலிங்கக் கடவுளே. (௰)

பதிகம் முற்றிற்று.

## ஆசீர்வாதகவி.

சீரானனத்தின்மேற் செங்கமலமதன்மேற்
செழுங்கருங் குவளையொன்றாச்
சேர்ந்தொருகொடித்தலைப் பூத்துச்சலத்தெழுஞ்
செய்கையில் லாதியாகத்
தோராவெழுந்ததிது புதுமையிதைநாமெடுத்
தீசபூ சைக்களிப்பே
மெனவெண்ணிவழுதிநண் ணியவக்கொடிக்கணிய
வினியபா மாலைசூட்டற்
கோராதரக்கொண்டல் கண்டனூருறைவணிக
ஞ்ப சிறப்பமைந்
தொருமாலிடத்தவ தரித்தவப்பெயரினு
ளுட்குளிர மார்க்கண்டனே
நேரானபுத்திரரொ டளவிலாதிதியுமின்
னிமிட மிப் புவியில்வாய்ந்து
நீடூழிவாழ்கவே யக்கொடியினடிமலரை
நெஞ்சத் தமைக்கின்னே

# சூசிபத்திரம்.

## பிள்ளைத்தமிழ்.

| பருவம். | பாட்டு. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| செங்கீரை .. | சா | ஞாலையுளாட்டு | ஞாலையுளிட்டு |
| தாலம். ... | க | யிடிக்கி | யிடுக்கி |
| ஷை ... | சு | வேல்கொண்ட | வேற்கொண்ட |
| ஷை. .. | அ | நாலாமோத்து | நாலாமோத்தும் |
| சப்பாணி .. | ச | மேக்குற | மேக்கற |
| வருகை ... | ரு | மதிகுறித்து | மதிக்குறித்து |
| ஷை ... | சா | வெண்ணையு | வெண்ணெயு |
| அம்புலி ... | கூ | பேதையென்றனை | பேதையேன்றனை |
| ஷை .. | ய | இளையிலாஞாக்கி | இளையிலாதாக்கி |
| அம்மானை ... | ரு | மஞ்சணிர | மஞ்சணிற |
| நீராடல் ... | அ | மடைந்கொரா | மடைந்தொரா |
| ஊசல் ... | ரு | டியமொல | டியரெலா |

## சுந்தரேசர் பதிகம்.

| | | | |
|---|---|---|---|
| | எ | சாதிரன்<br>தர்மமே | சந்திரன்<br>தர்மமோ |